வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු




Email : news@eelanadu.lk | மலர் : 04 | 20.05.2023 சனிக்கிழமை | இதழ் : 162 | பக்கங்கள் : 16

# மலையக இந்திய வம்சாவளி மக்களை தனித் தேசிய இனமாக ஏற்கவேண்டும்!



## மனோ கணேசன் எம். பி. வலியுறுத்து

நுவரெலியா, மே 20

நாட்டில் வாழும் வட, கிழக்கு மக்கள், முஸ்லிம் மக்கள், சிங்கள மக்கள் ஆகிய மக்களுடன் மலையக இந்திய வம்சாவளி மக்களையும் இணைத்துகொண்டால்தான் அது இலங்கை நாடு. எங்களை ஒதுக்கி வைத்தால் இலங்கை நாடு என ஏற்றுக்கொள்ள முடியாது. எங்களையும் ஒரு தனி தேசிய இனமாக ஏற்றுக்கொள்ள வேண்டும் - என்று தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப் பினருமான மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

15

## 35,000ஐ கடந்தது டெங்கு நோயாளர்

கொழும்பு, மே 20

இந்த ஆண்டில், நாட்டில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை 35 ஆயிரத்தை கடந்ததாக தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

நேற்று காலை நிலவரத்தின்படி, டெங்கு பாதிப்பு எண்ணிக்கை 35 ஆயிரத்து 75 ஆகக் காணப்பட் டது. கம்பஹா 7,904, கொழும்பு 7,348 களுத்துறை யில் 2,086 நோயளர்கள் பதிவாகியுள்ளனர். இதன்படி, மேல் மாகாணத்தில் மொத்த

15



## போரில் இறந்த படையினர் நேற்று நினைவுகூரப்பட்டனர்!

கொழும்பு, மே 20

உள்நாட்டு போரில் கொல்லப்பட்ட முப்படையின ரும் நேற்று நினைவுகூரப்பட்டனர்.

தேசிய போர் வீரர் தினம் என்ற பெயரில் அரசாங்கம் வருடாந்தம் முன்னெடுக்கும் இந்த நினைவேந்தல் நிகழ்வு நேற்று ஜனாதிபதி தலைமையில் பத்தரமுல்லையிலுள்ள ஜெயவர்த்தனபுர நினைவு தூபியில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதமர் தினேஷ் குணவர்த்தன, சபா நாயகர் மகிந்த யாபா அபேவர்த்தன, எதிர்க்கட்சி தலை வர் சஜித் பிரேமதாஸ, பீல்ட் மார்ஷல் சரத் பொன் சேகா, முப்படை தளபதிகள், பாதுகாப்பு செயலாளர், படை களின் தலைமை அதிகாரி

15

## சுதந்திரம் கிடைத்தும் உரிமைகளை அனுபவிக்க முடியாத இனமாக நாம்!

### மலையகம் 200 நிகழ்வில் இராதாகிருஷ்ணன்

நுவரெலியா, மே 20

இலங்கை கடந்த 1948 ஆம் ஆண்டு ஆங்கிலேய ரிடமிருந்து சுதந்திரம் பெற்ற போதிலும் அந்த சுதந்திரம் மூலம் கிடைக் கப்பெற்ற உரிமைகளை நாம் அனுபவிக்க முடி யாமல் இன்றும் இந்த நாட்டில் இருக்கின்றோம். இந்த நாடு சுதந்திரம் பெற முன்னரும் சுதந் திரம் கிடைத்த பின்பும் எமது மக்கள் அடிமை களாகவே வாழுகின்றார் கள் என்பதுதான் உண்மை - என்று கூறியுள்ளார் வே.

15

## புலிகளை இந்தியா மீள உருவாக்குகிறதா?



### ஜனநாயக போராளிகளிடம் ரி. ஐ. டியினர் விசாரணையாம்

யாழ்ப்பாணம், மே 20

விடுதலைப் புலிகளை மீள் உருவாக்கும் முயற்சி யில் இந்தியா ஈடுபடுகின் றதா என கொழும்பிலி ருந்து வந்த பயங்கரவாத தடுப்பு பிரிவினர் (ரி. ஐ. டி.) தன்னிடம் விசா ரணை நடத்தினர் என ஜனநாயக போராளிகள் கட்சியின் செயலாளர் இ. கதிர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று நடந்த செய்தியா ளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறி னார்.

கடந்த எட்டு ஆண்டு களாக அரசியல் செயல் பாடுகளில் ஈடுபட்டு வருகின்றோம். வடக்கு - கிழக்கு மாகாணங்களில் எமது அரசியல் நடவடிக் கைகளை முன்னெடுப்பது டன் எமது ஜனநாயக போராளிகள் கட்சி தேசிய மாநாடு ஒன்றை யும் நடத்தி இருக்கின் றது.

இதேவேளை, தமிழ்த் தேசிய அரசியல் கட்சிக ளோடு இணைந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலும்

15



## மாணவியை காணவில்லை!

மன்னார், மே 20

மன்னாரில் நேற்று முன்தினம் மாணவி ஒரு வரை காணவில்லை என்று மன்னார் - சிலா வத்துறை பொலிஸ் நிலை யத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சிறுவர்களை கடத் தும் முயற்சிகள் இடம் பெற்றமை தொடர்பான சம்பவங்களால் மன்னார் மாவட்டத்தில் அச்ச நிலை நிலவுகின்றது. இந்த நிலையில், மாணவி காணா மல் போயி ருப்பது அந்தப் பகுதியில் பெரும்

15

## தமிழரின் உரிமைகளுக்காக பொது வாக்கெடுப்பு தேவை

### அமெரிக்க காங்கிரஸில் மனு

நியூயோர்க், மே 20

பொது வாக்கெடுப்பு உட்பட சர்வதேச ஜன நாயக வழிமுறைகள் ஊடாக ஈழத் தமிழர்க ளின் உரிமையும் சமத்துவ மும் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதை உள் ளடக்கிய இரு கட்சித் தீர்மான முன்மொழிவு ஒன்று அமெரிக்கக் காங் கிரஸில் சமர்ப்பிக்கப்பட் டுள்ளது.

அமெரிக்கக் காங்கி ரஸ் (பாராளுமன்றம்) உறுப்பினர்களான டெபோரா ரோஸ் மற் றும் பில் ஜான்சன் ஆகிய இருவருமே முள்ளிவாய்க் கால் இன அழிப்பு நாளா கிய நேற்று முன்தினம் இந்த முன்மொழிவைச் சமர்ப்பித்தனர்.

ஈழத் தமிழர்கள் உட் பட இலங்கைத் தீவின் அனைத்து இன மக் களும் ஜனநாயக ரீதியாகவும்

15

## ஜனாதிபதி தேர்தலை எதிர்கொள்ளத் தயார்!

### எதிர்க்கட்சி தலைவர் சஜித்



கொழும்பு, மே 20

ஜனாதிபதித் தேர்தலை முன் கூட்டியே நடத்துவதற்கு எம் மால் விடுக்கப்பட்ட கோரிக் கைக்கு அமைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அதற்கான தயார்படுத்தல்களை முன்னெ டுத்துள்ளாரென தகவல்கள் கிடைத்துள்ளன. எந்த சந்தர்ப்பத்திலும் தேர்தலை எதிர்கொள்ள தயாராகவுள்ளோம் என்று எதிர்க்கட்சி தலை வர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

பொலிஸாரால் நேற்று முன்தினம் இரவு கைது செய்யப்பட்ட பல்கலைக்கழக மாணவர்கள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

15

## ஓ. எல்., ஏ. எல். பரீட்சைகளை ஒரே ஆண்டில் நடத்த முடிவு

### கல்வி அமைச்சர் அறிவிப்பு

கொழும்பு, மே 20

கல்வி பொதுத் தரா தர சாதாரண தரம், உயர் தரம் ஆகிய இரு பரீட்சை களையும் 2024இல் - ஒரே ஆண்டில் நடத்தும் வகை யில் பரீட்சை அட்ட வணை புதுப்பிக்கப்பட வுள்ளது என்று கல்வி அமைச்சர் அறிவித்துள் ளார்.

நேற்று முன்தினம் கல்வி அமைச்சில் இடம் பெற்ற நிகழ்வு ஒன்றில் பங்கேற்று பேசிய அவர்,

அடுத்த வருடத்தில் கல்வி பொதுத் தராதர சாதாரண தரம் மற்றும் உயர்தரம் ஆகிய இரண்டு பரீட்சைகளையும் ஒரே வருடத்துக்குள் நடத்த முடியுமான வகையில் கல்வி நடவடிக்கைகளை படிப்படியாக வழமை யான நிலைக்கு கொண்டு வந்து, பரீட்சை நேர அட் டவணையை புதுப்பிக்க இருக்கிறோம்- என்றார்.

## இப்படியும் நடக்கிறது...!

கிழக்கு மாகாண ஆளுந ராக இருந்த அநுராதா யஹம் பத் தன்னை தீவிர சிங்கள தேசியவாதியாகக் காட்டிக் கொண்டவர்.

கோட்டாபயவின் 'வியத்மக' எனற அமைப்பின் ஸ்தாபகர்களில் ஒருவர். கோட்டாவை ஜனாதிபதி ஆக்கியதில் இந்த அமைப் பின் பங்கு முக்கியமானது. அதனால்தான் அந்த அமைப் பைச் சேர்ந்த பலரை முக்கிய பதவிகளில் அவர் நியமித் தார். அதேவேளை, அந்த அமைப்பை சேர்ந்த நாலக கொடஹேவா போன்றவர் களை அரசியலுக்குக் கொண்டுவந்து அமைச்சராக வும் ஆக்கினார்.

கிழக்கு மாகாண ஆளுந ராக இருந்த அநுராதா, அந்த பதவியில் இருந்துகொண்டே மாகாண சபை ஆட்சி முறைக் கும் பதின்மூன்றாவது அரசிய லமைப்பு திருத்தத்துக்கும் எதிராகவும் பகிரங்கமாகக் கருத்துச் சொல்லிவந்தார்.

கோட்டாபய நாட்டை விட்டு தப்பிச் சென்றபோது பதில் ஜனாதிபதியாகப் பதவி யேற்ற ரணில் விக்கிரமசிங்க விடம் சில தனிப்பட்ட கோரிக்கைகளை விடுத்திருந் தாரென அப்போது கூறப்பட் டதுண்டு. அவற்றில் கிழக்கு மாகாண ஆளுநர் மற்றும் வடமேற்கு மாகாண ஆளுநர் கரன்னகொட ஆகியோரை அந்தப் பதவிகளிலிருந்து வெளியேற்ற வேண்டாம் என்பதும் ஒன்று.

அதனால் அவர்களை அந் தப் பதவியில் தொடர ரணில் அனுமதியளித்திருந்த போதிலும் அவர்களின் நடவ டிக்கைகள் ரணிலுக்கு பல சங்கடங்களை உருவாக்கின என்று கூறப்படுகின்றது.

முக்கியமாக கிழக்கு மாகாண ஆளுநர் சீனத் தூதரகத்துடன் சேர்ந்து கிழக்கில் பல்வேறு நலத்திட்டங்களை செய்த தும், சீன மாகாணம் ஒன்று டன் நட்புறவு ஒப்பந்தம் செய்ததும் குறிப்பிடத்தக் கவை. இதனை பக்கத்து நாடு ரசிக்கவில்லை என்பதும் அவ்வப்போது செய்திகளாக வெளிவந்தன. சீன தூதுவர் கிட்டத்தட்ட ஒவ்வொரு வாரமும் கிழக்குக்கு சென்று பல நலத்திட்டங்களை செய்துவந்தார்.

இதனால், பல அசௌகரி யங்களை சந்தித்த ஜனாதிபதி கடைசியாக அவரை மாற் றியே ஆகவேண்டும் என்ற முடிவுக்கு வந்த பின்னர், கோட்டாபயவைச் சந்தித்து அவரை மாற்றவேண்டியதன் அவசியத்தை விளக்கிக்கூறி, அவரின் அனுமதியுடனேயே அவர்களை மாற்றும் முடிவுக்கு வந்திருந்தாரென அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்தன.

கிழக்கு மாகாண ஆளு நருக்கு வெளிநாடு ஒன்றில் தூதுவர் பதவியும் கரன்ன கொடவுக்கு உள்ளூரிலேயே (அவர்தான் வெளிநாடு செல்ல முடியாதே) முக்கிய அரச நிறுவனம் ஒன்றின் தலைமைப் பதவியும் வழங்கு வதற்கு ஜனாதிபதி சம்மதம் தெரிவித்திருந்தாராம்.

இதனையடுத்தே பதவியி லிருந்து விலகுமாறு ஜனாதி பதி செயலகம் ஆளுநர்களை கேட்டுக்கொண்டது. ஆனால், அப்படி பதவி விலக வேண்டாம் என்றும் பலவந் தமாக பதவியிலிருந்து நீக்கி னால் அதற்கு எதிராக தாங் கள் வீதிக்கு வந்து போராடு வோம் எனவும் சில பிக்குமார் கொடுத்த ஆலோசனையை தொடந்தே அவர்கள் பதவி விலகுவதில்லை என்ற முடிவுக்கு வந்திருந்தனர்.

பலவந்தமாக அவர்களை பதவியிலிருந்து ஜனாதிபதி வெளியேற்ற முயன்றால் அதற்கு எதிராக பலத்த போராட்டத்தை நடத்தி அவர்களை சிங்கள கடும் கோட்பாளர்கள் மத்தியில் 'ஹீரோ'க்கள் ஆக்கி, அவர்களில் ஒருவரை சிங்கள - பௌத்த வாக்குகளை இலக்கு வைத்து ஜனாதிபதி தேர்தலில் களம் இறங்குவது என்ற முடிவுடன் சிலர் காய் நகர்த்தியதாகவும்கூட பேச்சப்பட்டது.

சொல்வார் சொல் கேட்டு இன்று இருவரும் ஆளுநர் பதவிக்கு பதிலாக கிடைக்க விருந்த பதவிகளையும் இழந்து நிற்கின்றனர்.

கிழக்கு மாகாணத்தில் சீனாவின் ஈடுபாட்டைக் குறைப்பதற்காக கிழக்கு ஆளுநரை மாற்றவேண்டும் என்று 'விரும்பியவர்களின்' தெரிவாகவே இப்போது அந்த மாகாணத்துக்கு செந்தில் தொண்டமான் நியமிக்கப்பட்டிருக்கிறார் என்று நம்பப்படுகின்றது.

ஆனால், அவர் பதவி யேற்ற முதல்நாளே முன்னாள் ஆளுநரின் ஏற்பாட்டில் சீன மாகாணம் ஒன்றுடன் செய் யப்படவிருந்த நட்புறவு ஒப்பந்தத்தில் கையெழுத்திட அந்த சீன மாகாண ஆளுந ரும் திருகோணமலை வந்தி ருந்தார்.

முதல்நாளன்று அந்த ஒப் பந்தத்தில் கையெழுத்திட் டதே புதிய ஆளுநர் செய்த முதல் பணியாகியிருக் கின்றது.!

- ஊர்க்குருவி

# சிறுவர்களிடத்தில் வேகமாக பரவுகிறது இன்புளூவன்சா!

## சீமாட்டி மருத்துவமனை எச்சரிக்கை

கொழும்பு, மே 20

சிறுவர்கள் சளி, காய்ச்சல், இருமல் அல்லது சுவாசிப்ப தில் பிரச்னை போன்றவற்றால் பாதிக்கப்பட்டிருந்தால் அவர்களை பாடசாலைகள் உட்பட எங்கும் அனுப்ப வேண்டாம் என எச்சரிக்கை விடுத்துள்ள கொழும்பு சீமாட்டி மருத்துவமனையின் குழந்தை நல மருத்துவர் தீபல் பெரேரா சிறுவர்கள் மத்தியில் இன்புளூவன்சா வைரஸ் வேகமாக பரவுகின்றது என வும் எச்சரித்துள்ளார்.

இன்புளூவன்சா வைரஸ் பாடசாலைகள், தனியார் வகுப்புகள், சிறுவர் பராம ரிப்பு நிலையங்களில் வேக மாக பரவுகின்றது என அவர் எச்சரித்துள்ளார்.

சிறுவர்களிடம் இந்த நோய் அறிகுறிகள் தென்பட் டால் அவை வேகமாக ஏனைய குடும்ப உறுப்பினர் கள் மத்தியிலும் பரவலாம். நோய் அறிகுறிகள் தென்படும் சிறுவர்களை வீடுகளிலேயே வைத்திருந்து மருத்துவர்களின் பரிந்துரையின் அடிப்படை யில் பரசிற்றமோலை வழங்க வேண்டும் என்றும் அவர் அறிவுறுத்தியுள்ளார்.

சிறுவர்கள் சுவாசப் பிரச் னையால் பாதிக்கப்பட்டால் அவர்களை அருகிலுள்ள மருத்துவமனைக்கு கொண்டு செல்லவேண்டும். அவர்கள் நிமோனியாவால் பாதிக்கப் பட்டிருக்கலாம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இன்புளூவன்சா தொற் றால் பாதிக்கப்பட்டவர்கள் இருக்கும் வீடுகளில் முகக் கவசம் அணிவது தொற்றை தடுக்க உதவும் என்றும் கூறி னார்.

(ஐ)

# 3750 இராணுவத்தினருக்கு பதவி உயர்வு வழங்கினார் ஜனாதிபதி!



கொழும்பு, மே 20

ஜனாதிபதி ரணில் விக்கிர மசிங்கவின் ஆலோசனைக்கு அமைய 14ஆவது தேசிய போர் வீரர் தினத்தை முன் னிட்டு பாதுகாப்பு அமைச்சு மற்றும் இராணுவத் தளபதி லெப். ஜெனரல் விக்கும் லியனகேவின் பரிந்துரைக்கு அமைய 3,750 இராணுவத் தினருக்கு பதவி நிலை உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

அதற்கமைய 402 சிரேஷ்ட அதிகாரிகளுக்கும் , 3,348 ஏனைய அதிகாரிகளுக்கும் இவ்வாறு பதவி உயர்வு வழங் கப்பட்டுள்ளது.

பிரிகேடியர் நிலையிலுள்ள 7 அதிகாரிகள் மேஜர் ஜென ரல்களாகவும் , கேணல் நிலையிலுள்ள 19 பேர் பிரிகே டியர்களாகவும், லெப். கேணல்களாகவுள்ள 29 பேர் கேணல்களாகவும், மேஜர்க ளாகவுள்ள 33 பேர் லெப். கேணல்களாகவும், கப்டன் நிலையிலுள்ள 118 பேர் மேஜர்களாகவும், லெப்டி னன்ட்களாக உள்ள 97 பேர் கப்டன்களாகவும், இரண் டாம் லெப்டினன்ட்களாக உள்ள 90 பேர் லெப்டினன்ட் களாகவும் பதவி நிலை உயர்வுகளைப் பெற்றுள்ளனர்.

இதே போன்று கடேற் அதிகாரிகள், படையணிக ளின் பிரதானிகள், கோப்ரல் நிலை அதிகாரிகள், லான்ஸ் கோப்ரல் நிலை அதிகாரிகள் மற்றும் சிப்பாய்கள் உள்ளிட்ட பலருக்கும் இவ்வாறு பதவி நிலை உயர்வு வழங்கப்பட் டுள்ளதாக இராணுவத் தலைமையகம் தெரிவித்துள் ளது.

(ஐ)



# இந்திய கடற்படை கப்பல் திருகோணமலை வருகை

கொழும்பு, மே 20

இந்தியக் கடற்படைக் கப்பலான "பற்றி மால் 2023" மே 16-17 ஆகிய திகதிகளில் திருகோணமலைக்கான பயணத்தை மேற்கொண்டுள்ளது.

இலங்கை கடற்படையினரால் கடற்படை பாரம்பரி யத்துக்கு அமைவாக இந்தக் கப்பலுக்கு மனப்பூர்வமான வரவேற்பளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

2023 ஜூன் 21ஆம் திகதி நடைபெறவிருக்கும் சர்வ தேச யோகா தின முன்னோட்ட நிகழ்வாக விசேட யோகா அமர்வும் பல்வேறு அம்சங்களுடனான ஏனைய பல நிகழ்வுகளும் இந்தக் கப்பலின் வருகை இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

பிராந்தியத்தின் பொதுவான கடல்சார் பாதுகாப்பு சவால்களை இவ்வாறான அதிவேக ரோந்து கலங்கள் மூலம் வினைத்திறன் மிக்க வகையில் இலங்கை கடற் படையினர் எதிர்கொள்வதற்கான திறன்களை மேலும் வலுவாக்குவதற்காக இந்தியா - இலங்கை இடையில் காணப்படும் ஒத்துழைப்புக்கான சாத்தியக்கூறுகள் என்ற அடிப்படையில் அதிவேக ரோந்துக் கப்பலான இந்தி யாவின் பற்றி மாலின் இலங்கை விஜயமானது மிகவும் முக்கியத்துவமிக்கதாக அமைகின்றது.

# வசந்த முதலிகே உட்பட 8 பேர் பொலிஸாரால் கைது

கொழும்பு, மே 20

களனி பல்கலைக்கழக மாணவர் களால் நேற்று முன்தினம் இரவு முன் னெடுக்கப்பட்ட எதிர்ப்பு ஆர்ப்பாட் டத்தின் போது அனைத்து பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட் டாளர் வசந்த முதலிகே உள்ளிட்ட 8 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை கட்டுப் படுத்தச் சென்ற 2 பொலிஸ் உத்தியோ கத்தர்களுக்கு சிறு காயங்கள் ஏற்பட் டன என்று பொலிஸ் ஊடகப் பேச்சா ளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சட்டத்தரணி நிஹால் தல்துவ தெரி வித்துள்ளார்.

மாணவர்களுக்கு எதிரான ஒடுக்கு முறைகள் மற்றும் அரசாங்கத்தின் செயல்பாடுகளுக்கு எதிராக களனி பல்கலைக்கழக மாணவர்களால் நேற்றுமுன்தினம் இரவு இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப் பட்டது.

எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை கட்டுப்படுத்துவதற்காக களனி பல்கலைக்கழகத்தை சூழவும் பாது காப்பு பலப்படுத்தப்பட்டிருந்ததுடன் பொலிஸாரும் கலகத் தடுப்பு பிரிவினரும் அங்கு குவிக்கப்பட்டிருந் தனர்.

(ஐ)

ஈழநாடு
Eelanadu
20.05.2023 சனிக்கிழமை
சோபகிருது வருடம், வைகாசி 06

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## ஊசலாடும் பரிகார நீதி?

முள்ளிவாய்க்கால் அவலம் நிகழ்ந்து 14 வருடங்கள் ஆகிவிட்ட பின்னரும்கூட தமிழர்கள் எதிர்பார்த்த பரிகார நீதியை அனுபவிக்க முடியவில்லை. இப்போதும் சர்வதேசத்தை நோக்கி, "சர்வதேசமே பார்", என்று குரலெழுப்பும் நிலையிலேயே தமிழர் அரசியலின் நாட்கள் நகர்ந்து கொண்டிருக்கின்றன. சர்வதேசமென்று நாம் எதை சுட்டிக்காட்டுகின்றோம் என்பதிலும் பலருக்கு தெளிவிருப்பதாகத் தெரியவில்லை. உண்மையில், சர்வதேச சமூகமென்பது ஒன்றல்ல - அது பலது. தமிழர்களாகிய நாம் - மேற்குலகத்தை நோக்கி மட்டுமே குரலெழுப்புகின்றோம். அந்த வகையில் எமக்கான சர்வதேசமென்பது அமெரிக்கா, கனடா மற்றும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் மட்டுமே. இந்த நாடுகளின் இராஜதந்திர சமூகத்தினருக்கு புதிதாக கூறுவதற்கு நம்மிடம் ஒன்றுமில்லை. அவர்கள் அனைத்தையும் அறிவார்கள்.

ஆனால், அவர்களது செயல்பாடுகளுக்கு எல்லையுண்டு. ஏனெனில், இது இன்னொரு நாட்டின் விவகாரம். இன்னொரு நாட்டின் விவகாரமென்று வருகின்றபோது அவர்களின் எல்லை சர்வதேச நியமங்களின் அடிப்படையில்தான் அமைந்திருக்கும். அப்படித்தான் அவர்களும் கூறுவர். ஆனால், இதுவே அவர்களுடன் நேரடியாகத் தொடர்புபட்ட விடயங்கள் என்றால் எந்த நிமயங்களையும் அவர்கள் பொருட்படுத்துவதில்லை. உதாரணமாக அமெரிக்காவின் மீதான இரட்டை கோபுர தாக்குதலை தொடர்ந்து என்ன நடந்தது என்பதை உலகம் அறியும். அமெரிக்காவின்மீது கைவைத்ததைத் தொடர்ந்து உலக ஒழுங்கே மாறிவிட்டது.

நாடுகளின் இறைமை தொடர்பில் எல்லாம் அமெரிக்கா அலட்டிக் கொள்ளவில்லை. பாகிஸ்தானை எச்சரித்தது. பாகிஸ்தான் அடிபணிந்தது. அணிபணிந்துதான் ஆக வேண்டும் - இல்லாவிட்டால், பாகிஸ்தான் கற்காலத்துக்கு செல்ல நேரிட்டிருக்கும். ஏனெனில், இது அடிப்படையில் பலம் பொருந்திய நாடுகளின் ஆடுகளம். இங்கு அனைத்தும் அவர்களின் அதிகார நலன்களிலிருந்தே தீர்மானிக்கப்படும். இதனை நாம் தவறென்று வாதிடலாம் ஆனால், பயனில்லை. ஏனெனில், பலம் பொருந்திய சக்திகளை விமர்சிப்பதால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு எதுவும் கிடைத்துவிடப் போவதில்லை. அவர்களை எதிர்ப்பதால் நம்மை போன்ற சிறிய இனக் குழுக்களுக்கு நஷ்டம் ஏற்படுமே தவிர நன்மைகள் ஏற்படப் போவதில்லை.

இப்போதும் சிலர் உணர்ச்சிவசப்படுவதைக் காண முடிகின்றது. பல நாடுகள் இணைந்து விடுதலைப் புலிகளை அழித்துவிட்டதாக சத்தமிடுகின்றனர். இந்தியாவை விமர்சிக்கின்றனர். அமெரிக்காவை விமர்சிக்கின்றனர் - சிலரோ ஒட்டுமொத்த உலகத்தையும் தூற்றுகின்றனர். இதன் மூலம் சிலருக்கு மன ஆறுதல் கிடைக்கலாமே தவிர, இவ்வாறான வாதங்களால் தமிழ் மக்களின் அரசியல் விடயத்தில் ஒரு சிறு துரும்பைக்கூட அசைக்க முடியாது. விடயங்களை அறிவுரீதியாக அணுகத் தெரியாதவர்களால் உணர்ச்சிவசப்பட மட்டுமே முடிகின்றது.

உலகத்தில் தமிழர்களுக்கு மட்டுமே இவ்வாறு நடந்ததாக எண்ணிக் கொள்வதால்தான் பலராலும் விடயங்களை ஆழமாகப் புரிந்துகொள்ள முடியவில்லை. முள்ளிவாய்க்கால் அழிவுகளை விடவும் மோசமான அழிவுகளை உலகம் கண்டிருக்கின்றது. ருவாண்டாவில் நூறு நாட்களில் எட்டு இலட்சம் மக்கள் கொல்லப்பட்டனர். உலகம் வேடிக்கைதான் பார்த்துக் கொண்டிருந்தது. குவாட்டமாலாவில் இரண்டு இலட்சம் மாயன் பழங்குடி மக்கள் கொல்லப்பட்டனர்.

அப்போதும், உலகம் வேடிக்கைதான் பார்த்துக் கொண்டிருந்தது. மனிதாபிமானம், மனித நேயம் தொடர்பிலான கரிசனையுள்ளவர்கள் உலகில் இருந்தாலும்கூட நாடுகள் தங்களின் நீண்டகால அரசியல், பொருளாதார - முக்கியமாக பாதுகாப்பு நலன்களை நிறுத்துப் பார்க்காமல் விடயங்களில் தலையீடு செய்யாது - செய்யவும் முடியாது. இதனைப் புரிந்து கொண்டுதான் தமிழ் அரசியல் தரப்புகள் சிவில் சமூக குழுக்கள் சிந்திக்கவும் - செயல்படவும் வேண்டும். இந்த பின்புலத்தில் நோக்கினால் தமிழர்கள் கோரும் பரிகார நீதியின் நிலைமை ஊசலாட்டமாகவே தொடர்கின்றது. ஒரு கட்டத்தில் முற்றிலும் கைவிடப்படவும் வாய்ப்பு உண்டு.

## மாணவிகளை கடத்த முயற்சி; சந்தேகநபர்கள் அடையாளம்!

மன்னார், மே 20

தலைமன்னாரில் மூன்று மாணவிகளை கடத்த முயற்சித்ததாகக் கூறப்படும் சந்தேகநபர்கள் இருவர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மன்னார் நீதிவான் முன்னிலையில் நேற்று முன்தினம் நடைபெற்ற அடையாள அணிவகுப்பின்போது, மூன்று சிறுமிகளாலும் சந்தேகநபர்கள் அடையாளம் காட் டப்பட்டனர் என்று பொலிஸார் கூறினர்.

இதனையடுத்து, சந்தேகநபர்களை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார். இந்த நிலையில், சந்தேகநபர் கள் இருவரையும் எதிர்வரும் 25 ஆம் திகதியும் அடையாள அணி வகுப்புக்கு உட்படுத்தவுள்ளதாக பொலிஸார் கூறினர்.

தலைமன்னார் சிலுவை நகரில் கடந்த 11ஆம் திகதி இனிப்புகள் வழங்குவதாகக் கூறி சிறுமிகளை சந்தேகநபர்கள் வானுக்கு வருமாறு அழைத்துள்ளனர் என்று தெரிவித்து பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

அத்துடன், சந்தேகநபர்களும் மக்களால் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தனர்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை தலைமன்னார் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## சீனாவுக்கு குரங்குகள் ஏற்றுமதி; மே 26இற்கு வழக்கு ஒத்திவைப்பு!

கொழும்பு, மே 20

ஒரு இலட்சம் குரங்குகளை சீனாவுக்குப் பிடித்து ஏற்றுமதி செய்வதை எதிர்த்து விலங்கு உரிமை அமைப்புகள் மற்றும் விலங்கு உரிமை ஆர்வலர்கள் தாக்கல் செய்த எழுத்தாணை மனுவை எதிர்வரும் 26ஆம் திகதிக்கு மேல்முறையீட்டு நீதிமன்றம் ஒத்திவைத்தது.

இந்த விடயம் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களான நிஸங்க பந்துல கருணா ரத்ன, எம். ஏ. ஆர். மரிக்கார் ஆகிய இரு நீதிபதிகள் அடங்கிய அமர்வு முன் விசாரணைக்கு வந்த போது, சட்டமா அதிபர், பிரதிவாதிகள் சார்பில் உண்மைகளை முன்வைப் பதற்கு மேலதிக திகதியை கோரினார்.

மனுதாரர்கள் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி சஞ்சீவ ஜயவர்த்தன முன்னிலையாகியிருந்தார்.

சீன உயிரியல் பூங்காக்களில் காட்சிப்படுத்துவதற்காக இலங்கைக்கு சொந்தமான ஒரு இலட்சம் செங்குரங்குகளை சீனாவுக்கு ஏற்றுமதி செய்யுமாறு சீன அரசாங்கம் விடுத்த கோரிக்கையை அரசாங்கம் பரிசீலித்து வருவதாக விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர அண்மையில் பகிரங் கமாக அறிவித்திருந்தார்.

இலங்கை வனவிலங்கு மற்றும் இயற்கை பாதுகாப்பு சங்கம், விலங்கு உரிமைகள் மற்றும் சுற்றுச் சூழலுக்கான பேரணி, விலங்குகளுக்கான நீதி, மீட்பு விலங்குகள் இலங்கை, விலங்கு நல செயல்பாட்டாளர் ஒட்டாரா குணவர்தன உள்ளிட்ட பல்வேறு தரப்பினர், ஒரு இலட்சம் குரங்குகளை சீனாவுக்கு ஏற்றுமதி செய்யும் அமைச்சரின் முடிவை எதிர்த்து சந்திர போஷ் இந்த மனுவை தாக்கல் செய்தார்.

இலங்கையில் மூன்று அங்கீகரிக்கப்பட்ட கிளை இனங்கள் உள்ளன என்று மனுதாரர்கள் தெரிவித்தனர். 1977 கணக்கெடுப்பின்படி, உலர் வலயத்தில் 4 இலட்சத்து 39 ஆயிரம் குரங்குகளும், தாழ்நில ஈர மண்டலத்தில் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் குரங்குகளும், மலைவாழ் இனங்களின் 1,500 குரங்குக ளும் உள்ளன.

இலங்கையின் குரங்குகளை சீனாவுக்கு ஏற்றுமதி செய்வதற்கு ஒப்புதல் அளிக்கும் அல்லது அனுமதிக்கும் எந்தவொரு முடிவையும் ரத்து செய்து, இடைக்கால உத்தரவை மனு தாரர்கள் கோரியுள்ளனர்.

## இரண்டு கிலோ தங்கம் கடத்தியவர் ரூ. 12 இலட்சம் அபராதம் கட்டினார்!


கொழும்பு, மே 20

துபாயிலிருந்து சுமார் 4 கோடி ரூபாய் பெறுமதியான 2 கிலோ தங்கத்தை நாட்டுக் குள் கடத்தும் முயற்சி முறியடிக்கப்பட்டதாக இலங்கை சுங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கொழும்பு பிரதேசத்தைச் சேர்ந்த வர்த்தகர் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் சோதனைக்கு உட்படுத்தப்பட்டபோது மூன்று பைகளில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில், தங்கம் கைப்பற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

விமான நிலைய சுங்கப் பிரிவினர் தங்கத்தை பறிமுதல் செய்ததுடன், 12 இலட்சம் ரூபாய் அபராதம் விதித்து குறித்த நபரை விடுவித்ததாத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



மே - 20 சனிக்கிழமை
சோபகிருது வருடம் - வைகாசி 06
நல்ல நேரம் : 07.30 - 09.00
ராகு காலம் : 09.00 - 10.30
திதி : பிரதமை




**மேடம்**
ராசிக்குள் சந்திரன் நீடிப்பதால் வேலைச்சுமையால் உடல் அசதி மனச்சோர்வு வந்து நீங்கும். சக ஊழியர்களுடன் பனிப்போர் வந்து நீங்கும். வளைந்து கொடுத்துச் செல்ல வேண்டிய நாள்.

**இடபம்**
குடும்பத்தை பற்றிய கவலைகள் வந்து நீங்கும். யாருக்கும் சாட்சி கையெழுத்திட வேண்டாம். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் பிரச்னைகள் வந்து விலகும். கவனம் தேவைப்படும் நாள்.

**மிதுனம்**
குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிப்பீர்கள். வியாபாரத்தில் வேலையாட்கள் கடமையுணர்வுடன் செயல்படுவார்கள். உத்தியோகத்தில் அதிகாரிகளால் பாராட்டப்படுவீர்கள்.

**கடகம்**
கடந்த கால இனிய அனுபவங்களை நினைவுக் கூர்ந்து மகிழ்வீர்கள். சக ஊழியர்களின் ஆதரவால் நினைத்ததை முடிப்பீர்கள். அதிகாரிகள் உங்களுக்கு ஆதரவாக இருப்பார்கள்.

**சிம்மம்**
கணவன் - மனைவிக்குள் மனம் விட்டு பேசுவீர்கள். வீடு வாகனத்தை சீர் செய்வீர்கள். வியாபாரத்தில் புது ஒப்பந்தம் கையெழுத்தாகும். இழந்த உரிமையை பெறுவீர்கள். திட்டங்கள் நிறைவேறும்.

**கன்னி**
சந்திராஷ்டம் இருப்பதால் அனாவசிய பேச்சை தவிர்ப்பது நல்லது. சந்தேகப் புத்தியால் நல்லவர்களை இழக்க வேண்டி வரும். சின்னச் சின்ன இடர்பாடுகளை சமாளிக்க வேண்டி இருக்கும்.

**துலாம்**
கணவன் - மனைவிக்குள் ஆரோக்கியமான விவாதங்கள் வந்து போகும். வியாபாரத்தில் புது வாடிக்கையாளர்கள் அறிமுகமாவார்கள். உத்தியோகத்தில் மேலதிகாரி மதிப்பார். தன்னம்பிக்கை துளிர்விடும்.

**விருட்சிகம்**
குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். வியாபாரத்தில் புது யுக்திகளை கையாளுவீர்கள். அதிகாரிகள் உங்களுக்கு முன்னுரிமை தருவார்கள். நீங்கள் தொட்டது துலங்கும் நாள்.

**தனுசு**
புதிய திட்டங்கள் நிறைவேறும். அக்கம்-பக்கம் வீட்டாரின் தொல்லை குறையும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்கள் திகரிக் கும். புதிய சலுகைகள் கிடைக்கும். கனவு நனவாகும் நாள்.

**மகரம்**
முக்கிய பிரமுகர்களை சந்திப்பீர்கள். வியாபாரத்தில் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். உழைப்பால் உயரும் நாள்.

**கும்பம்**
திட்டவட்டமாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். வியாபாரத்தில் அதிரடியான திட்டங்கள் தீட்டுவீர்கள். உத்தியோகத்தில் உங்கள் கருத்துக்கு ஆதரவு பெருகும். நினைத்ததை முடிக்கும் நாள்.

**மீனம்**
குடும்பத்தில் சந்தோஷம் நிலைக்கும். பாதியில் நின்ற வேலைகள் முடியும். வேலையாட்கள் மதிப்பார்கள். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். புத்துணர்ச்சி பெருகும் நாள்.

# இந்திய - இலங்கை ஒப்பந்தங்கள்; தமிழினத்துக்கு செய்த துரோகம்!

## நாம் தமிழர் சீமான்

தூத்துக்குடி, மே 20

இந்திய அரசாங்கம் இலங்கையுடன் செய்த மூன்று ஒப்பந்தங்கள் நம் இனத்துக்கு செய்த மிகப்பெரிய துரோகம் என்று கூறியிருக்கிறார் நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் சீமான்.

நாம் தமிழர் கட்சி சார்பில் இன எழுச்சி பொதுக்கூட்டம் தூத்துக்குடியில் நேற்று முன்தினம் நடந்தது. இதில், பேசிய அந்தக் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் சீமான்,

"இந்திய அரசாங்கம் இலங்கையுடன் செய்த மூன்று ஒப்பந்தங்கள் நம் இனத்துக்கு செய்த மிகப்பெரிய துரோகம். தமிழ் மக்களுக்கு நன்மை செய்ய வேண்டும் என்று நினைப்பவர்கள் முதலில் விடுதலை புலிகள் மீதான தடையை நீக்க வேண்டும். தமிழர்களின் வாழ்வாதாரத்தை பாதுகாக்க கச்சத்தீவை மீட்க வேண்டும்.

வரும் பாராளுமன்ற தேர்தலில் வெல்வதை மட்டுமே இலக்காக கொண்டு மாநிலம் முழுவதும் பிரச்சார சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ளோம். திருமாவளவன் தி. மு. க. கூட்டணியில் இருந்து வெளியேற முடியாது. வட மாவட்டங்களில் தி. மு. க. வெற்றி பெற்றதற்கு திருமாவளவன்தான் காரணம். அ. தி. மு. க. கூட்டணியில் பா. ம. க. இருப்பதால் தி. மு. கவுக்கு திருமாவளவன் தேவை. ஆதலால் திருமாவளவனை கூட்டணியில் இருந்து வெளியே விட மாட்டார்கள். அ. தி. மு. க. - பா. ஜ. க. கூட்டணி இறுதியாகிவிட்டது.

நாம் தமிழர் கட்சியுடன் கூட்டணி வைப்பதை திருமாவளவன்தான் முடிவு செய்ய வேண்டும். நாம் தமிழர் கோட்பாடுகளை ஏற்று திருமாவளவன் உட்பட யார் வந்தாலும் ஏற்றுக்கொள்வோம். காங்கிரஸ் கட்சிக்கும் பாஜக-வுக்கும் வேறுபாடு இல்லை. இரண்டுமே ஒன்றுதான். ஊழல் பற்றி பேச காங்கிரஸுக்கு அருகதை இல்லை. கர்நாடகாவில் காங்கிரஸ் மேகதாது அணை கட்டுவதை தி. மு. கவும் திருமாவளவனும் தடுக்க முடியுமா..? மேகதாது அணையை வைத்துதான் கர்நாடகாவில் பாராளுமன்ற வாக்கு சேகரிப்பு நடைபெறும். இன்னும் ஆறு மாதத்தில் மேகதாது அணை கட்டுவார்கள் இதை தடுக்க முடியுமா? - என்றார். (ஐ)

# புலிகளின் அரசியல் படை நாம் தமிழர் கட்சியாம்!

## ருவிற்றரால் சர்ச்சை

சென்னை, மே 20

நாம் தமிழர் கட்சி என்பது இந்தியாவில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அரசியல் படைப் பிரிவு என்று அந்தக் கட்சியின் தகவல் தொழில்நுட்ப பாசறையின் தலைவராக கூறிக் கொள்ளும் சுனந்தா என்பவர் பதிவிட்டமை சர்ச்சையாகியுள்ளது.

இலங்கையில் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்துக்காக ஆயுத வழியில் போராடிய தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு 2009 மே 18ஆம் திகதியுடன் ஆயுதங்களை மௌனிப்பதாக அறிவித்தது. இந்த நிலையில், சி. பா. ஆதித்தனாரின் நாம் தமிழர் கட்சியை வாங்கிய சீமான், விடுதலைப் புலிகளின் கொடியை ஒத்த தன்மையுடன் தனது கட்சிக் கொடியை உருவாக்கினார்.

புலிகள் அமைப்பை இந்தியா தடை செய்தபோதும் நாம் தமிழர் கட்சியினர் அந்த அமைப்பின் படங்களை பயன்படுத்தி வருகின்றது. இதற்கு எதிராக இந்திய அரசாங்கம் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. இந்த நிலையில், அந்தக் கட்சியின் தொழில்நுட்ப பாசறை தலைவரின் கருத்து தமிழ்நாட்டில் புதிய சர்ச்சையை கிளப்பியுள்ளது. (ஐ)

# அமைச்சர் செந்தில் பாலஜியை பதவியிலிருந்து நீக்க வேண்டும்!

## பா. ஜ. க. வலியுறுத்து

கோவை, மே 20

தமிழக பா. ஜ. க. குழு இந்த மாதம் 21ஆம் திகதி ஆளுநர் ஆர். என். ரவியை சந்திக்கவுள்ளதாகவும், அமைச்சரவையில் இருந்து செந்தில்பாலாஜியை நீக்க வலியுறுத்துமாறு அவரிடம் கோர இருப்பதாகவும் பா. ஜ. க. மாநிலத் தலைவர் அண்ணாமலை கூறியுள்ளார்.

பா. ஜ. க. செயல்குழுக் கூட்டம் கோவையில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்றது. அக் கட்சியின் மாநிலத் தலைவர் அண்ணாமலை தலைமையில் நடந்த இந்தக் கூட்டத்தில் கட்சியின் செயல்குழு உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

இதன் பின்னர் பேசிய அண்ணாமலை, நாளை 21ஆம் திகதி காலை 10 மணிக்கு, தமிழக பாரதிய ஜனதா கட்சியின் குழு, தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவியை ராஜ்பவனில் சந்திக்கிறோம்.

ஆளுநரிடம் இரண்டு மனுக்களை கொடுக்க இருக்கிறோம். ஆளுநர் நேரடியாக தலையிட்டு இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். தறிகெட்டு ஓடக்கூடிய மது கடைகளுக்கும் கள்ள சாராயத்துக்கும் முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். அதேபோல் இரண்டாவது மனு, அமைச்சர் செந்தில் பாலாஜியை அமைச்சரவையில் இருந்து நீக்க ஆளுநர் முயற்சி எடுக்க வேண்டும். இது தொடர்பாக தமிழக முதல்வருக்கு அறிவுறுத்த வேண்டும் என்பது உட்பட இரண்டு மனுக்களை கொடுக்க இருக்கிறோம்.

மது கடைகள் மற்றும் கள்ளச் சாராயத்துக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். அமைச்சர் செந்தில்பாலாஜி உச்ச நீதிமன்ற உத்தரவின்படி, அவர் அமைச்சராக தொடர முடியாது. எனவே அவரை அமைச்சரவையில் இருந்து செந்தில் பாலாஜியை நீக்க முதல்வரை ஆளுநர் வலியுறுத்த வேண்டும் என்ற இரண்டு கோரிக்கைகளை நாங்கள் முன்வைக்க இருக்கிறோம்" என்றார். (ஐ)

# திராவிட மொடல் அரசாங்கம் உழைக்கும் மக்களுக்கானது!

## முதல்வர் ஸ்டாலின்

சென்னை, மே 20

திராவிட மொடல் அரசு, உழைக்கும் மக்களுக்கான அரசு என்று முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

நேற்று சென்னையில் தொழிலாளர் நலன் சார் நிகழ்வு ஒன்றில் பேசிய அவர்,

மே ஒன்றாம் திகதியை ஊதியத்தோடு கூடிய விடுமுறை தினமாக அறிவித்தது, தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச ஊதியம் கிடைக்க செய்தது, முன்னாள் முதலமைச்சர் கருணாநிதிதான் என்றும் அவர் தெரிவித்தார்.

தி. மு. க. ஆட்சியில் 10 ஆயிரம் தொழிலாளர்களுக்கு வீட்டு வசதி திட்டம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது என்றும், புடவை கடைகளில் வேலை பார்க்கும் தொழிலாளர்களுக்கு இருக்கை வசதி வைக்க வேண்டும் என சட்டம் திருத்தப்பட்டுள்ளதாகவும் முதலமைச்சர் குறிப்பிட்டார். திராவிட மொடல் அரசு, உழைக்கும் மக்களுக்கான அரசு என்றும், தொழிலாளர்களின் ஒருவனாக என்றும் இருப்பேன்- என்றார். (ஐ)

# மின்சாரக் கட்டணத்தை 27 வீதமாக குறைக்கலாம்

## பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு

கொழும்பு, மே 20

மின்சாரக் கட்டணத்தை 27 சதவீதமாகக் குறைக்கவேண்டும் என வலியுறுத்தியுள்ள பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க, 3 வீதத்தால் குறைக்கும் இலங்கை மின்சார சபையின் முன்மொழிவு ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல என தெரிவித்தார்.

இந்த ஆண்டு பெப்ரவரி மாதம், போலியான தரவுகளைக் காண்பித்து 66 சதவீதம் கட்டணம் உயர்த்தப்பட்டது. உண்மையில் அப்போது, 35 சதவீதம் மட்டுமே கட்டணத்தை உயர்த்தியிருக்கவேண்டும்.

அன்று, இலங்கை மின்சார சபையினால் மதிப்பிடப்பட்ட மின்சாரத் தேவையானது, 16 ஆயிரத்து 550 ஜிகாவாட். இந்த ஆண்டு மின்சாரத் தேவை 15 ஆயிரத்து 50 ஜிகாவாட் மணி நேரமாக மட்டுமே இருக்கும் என்பது எமது மதிப்பீடாக இருந்தது.

ஏப்ரல் மாதம், எமது மதிப்பீடு சரியானது மின்சார சபை எதிர்வரும் ஆண்டுக்கான தேவை 15,264 ஜிகாவாட் மணிநேரமாக இருக்கும் என்று மின்சாரசபை எழுத்துபூர்வமாகத் தெரிவித்தது.

ஆணைக்குழுவின் மதிப்பீட்டின்படி மின்சாரக் கட்டணங்களை நிர்ணயித்து அமுல்படுத்தியிருந்தால் இன்று மின்சார பாவனையாளர்கள் எதிர்நோக்கும் நிலைமை ஏற்பட்டிருக்காது.

மின்சார கட்டண திருத்தத்தில், இலங்கை மின்சாரச் சட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட கட்டண முறையின்படி முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்படவேண்டும்.

அந்த முறையின்படி, மின்சாரம் வழங்குவதற்கான நியாயமான செலவை மட்டுமே மின்சார நுகர்வோரிடமிருந்து வசூலிக்க முடியும். எவ்வாறாயினும், மின்சார நுகர்வோர்களிடம் இருந்து மின்சார சபை பெற்ற கடனை மீளப்பெறுவதற்கான முன்மொழிவுகளை உள்ளடக்கி அங்கீகரிக்கப்பட்ட முறைக்கு பதிலாக இம்முறையும் கட்டண திருத்த யோசனையை நடைமுறைப்படுத்த முயற்சிக்கப்படுகிறது.

எரிபொருள், மின்சாரத்திற்காக அதிக சுமை சுமக்க நேரிட்டால், அது சாதாரண நுகர்வோர் மட்டுமின்றி தொழிலதிபரையும் பாதிக்கிறது.

எரிபொருள் விலை உயர்வால் எரிபொருள் தேவை குறைந்துள்ளது. அதிக மின் கட்டணத்தால் மின் தேவை குறைந்துள்ளது. எரிசக்தி நியாயமான விலையில் வழங்கப்படவேண்டும்.

பொருளாதாரத்திற்கு வரம்பற்ற ஆற்றலை வழங்கவேண்டும். விலையை நியாயமாக குறைக்கவேண்டும். அதை உடனடியாக செய்யவேண்டும்.

உலக சந்தையில் எரிபொருள் விலை குறைந்துள்ளது. கடந்த ஆண்டை விட மாற்று விகிதம் சிறப்பாக உள்ளது. அதற்கு பதில் நியாயமான முறையில் மக்களுக்கு நிவாரணம் வழங்க வாய்ப்பு கிடைத்துள்ளதால், உண்மையான செலவின் அடிப்படையில் எரிசக்தி விலை குறைக்கப்படவேண்டும்.

மின்சார சபை முன்வைத்துள்ள கட்டணத் திருத்த முன்மொழிவு தொடர்பான தேவையான தகவல்களை சமர்ப்பித்த பின்னர், கட்டண திருத்த முன்மொழிவு குறித்து பொது கலந்தாய்வு நடத்தி மக்களின் கருத்துகளின் அடிப்படையில் இறுதி முடிவை எடுக்க திட்டமிட்டுள்ளோம்-என்றார். (அ)

# சிங்கப்பூரில் 8ஆவது மாடியிலிருந்து விழுந்து உயிரிழந்த இலங்கை பெண்

கொழும்பு, மே 20

சிங்கப்பூரில் பணிபுரியும் இலங்கைப் பெண் ஒருவர் வீட்டுத் திட்டத்தின் 8ஆவது மாடியில் இருந்து குதித்து உயிரிழந்துள்ளார்.

தங்கொட்டுவவை சேர்ந்த நடிகா தில்ஹானி பெர்னாண்டோ (வயது-41) என்பவரே உயிரிழந்துள்ளார்.

அவர் தான் பணியாற்றிய அடுக்குமாடி குடியிருப்பின் உரிமையாளரான பஞ்சாபி மனிதரால் பல்வேறு துன்புறுத்தல்களை எதிர்கொள்வதாக தனது நண்பர்களிடம் வட்ஸ்அப் வழியாக தெரிவித்தார் எனக் கூறப்படுகிறது.

தன்னை இலங்கைக்கு திருப்பி அனுப்புமாறு வீட்டு உரிமையாளரிடம் கோரிக்கை விடுத்ததாகவும், ஆனால் அதற்கு சாதகமான பதில் கிடைக்கவில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

இதனால் தனது தந்தை இறந்துவிட்டதாக கூறிவிட்டு நாடு திரும்பவுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

நேற்று முன்தினம் சிங்கப்பூரில் பிரேத பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு, சடலம் இலங்கைக்கு கொண்டுவரப்படவுள்ளது.

இதற்கிடையில், மரணத்தை உறுதிப்படுத்திய வெளியுறவு அமைச்சு, சிங்கப்பூர் அதிகாரிகள் இன்னும் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகக் கூறியது.

மரணத்திற்கான காரணம் தொடர்பில் இதுவரை எந்த முடிவும் எட்டப்படவில்லை என வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் பிரியங்கா விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அவர் வீட்டு அடுக்குமாடி குடியிருப்பில் இருந்து விழுந்து விட்டதாகவும், அவரது மரணம் குறித்து சிங்கப்பூர் அதிகாரிகளுடன் இலங்கை தூதரகம் தொடர்பில் இருப்பதாகவும் அவர் கூறினார்.

இந்த மரணத்தில் சந்தேகம் உள்ளதாக உயிரிழந்த பெண்ணின் கணவர் தெரிவித்துள்ளார்.

தனது மனைவி கொல்லப்பட்டுள்ளார் என்றும் அவர் கூறினார். (அ)

# ஜூன் மாதத்தில் புதிதாக 7,800 ஆசிரியர் நியமனம்!

கொழும்பு, மே 20

தேசிய மற்றும் மாகாண பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களைத் தீர்க்கும் வகையில் கல்வியியற் கல்லூரியில் பயிற்சி பெற்ற 7 ஆயிரத்து 800 டிப்ளோமாதாரிகளுக்கு எதிர்வரும் ஜூன் மாதம் 15ஆம் திகதி நியமனங்கள் வழங்கப்படவுள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அமைச்சர் இதனை கூறினார்.

அத்துடன் எதிர்காலத்தில் விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் மொழி போன்ற ஆசிரியர் பற்றாக்குறை உள்ள பாடப் பிரிவுகளுக்கு அங்கீகாரம் பெற்று 35 வயதுக்குட்பட்ட பட்டதாரிகளை தேசிய மற்றும் மாகாண மட்டங்களில் ஆசிரியர்களாக இணைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார். (அ)

# ஜோன்ஸ்டன் விடுதலை!

கொழும்பு, மே 20

வர்த்தக அமைச்சராக கடமையாற்றியபோது சதொச ஊழியர்களை பணியிலிருந்து நீக்கி அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தி அரசாங்கத்துக்கு நட்டத்தை ஏற்படுத்தியதாக குற்றம் சுமத்தப்பட்ட முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ உட்பட மூவரை விடுதலை செய்யக் கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி நாமல் பலல்லே இந்தத் தீர்ப்பை வழங்கினார்.

இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவினால் தாக்கல் செய்யப்பட்ட இந்த வழக்கை பராமரிக்க முடியாது என ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ உள்ளிட்ட பிரதிவாதிகள் நீதிமன்றத்தில் அடிப்படை ஆட்சேபனைகளை முன்வைத்திருந்தனர்.

அடிப்படை ஆட்சேபனையை ஏற்றுக்கொண்ட நீதிபதி, ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, சதொசவின் முன்னாள் தலைவர் எராஜ் பெர்னாண்டோ மற்றும் அதன் முன்னாள் பணிப்பாளர்களில் ஒருவரான மொஹமட் சாகிர் ஆகியோரை விடுதலை செய்யுமாறு நீதிபதி உத்தரவிட்டார். (அ)

# வாகனங்களின் பதிவு சான்றிதழில் மாற்றம்!

கொழும்பு, மே 20

வாகனப் பதிவுச் சான்றிதழிலிருந்து வாகனங்களின் முன்னாள் உரிமையாளர்கள் தொடர்பான பெயர் பட்டியலை நீக்குவதற்கு மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

அதற்கமைய கடந்த 17 ஆம் திகதி முதல் அமுலாகும் வகையில் இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த தீர்மானத்துக்கு அமைய அண்மைக்கால உரிமையாளர் மற்றும் தற்போதைய உரிமையாளரின் தகவல்கள் மட்டுமே சேர்க்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வாகனம் விற்கப்படும்போது பதிவுச் சான்றிதழில் முன்னைய உரிமையாளர்கள் பலரின் பெயர்கள் இருக்கின்றமையால் கடும் சிக்கல்கள் ஏற்படுகின்றமையால் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

# கோட்டாவை கைது செய்க!

## கனடா கொன்சவேர்ட்டிவ் கட்சி வலியுறுத்து



மொன்றியல், மே 20

**இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ஷவை கைது செய்யவேண்டும் என கனடாவின் கொன்சவேர்ட்டிவ் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் பியரே பொய்லிவ்ரே வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

முள்ளிவாய்க்கால் தமிழினப் படுகொலையின் 14 வருடத்தை குறிக்கும் வகையில் விடுத்த அறிக்கையில் அவர் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

கோட்டாபய ராஜபக்ஷவை கைது செய்யவேண்டும். அதன் மூலம் அவர் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் தனது குற்றங்கள் குறித்து பதிலளிக்கும் நிலையை ஏற்படுத்தலாம்.

இலங்கை யுத்தத்தில் சிக்குண்டதால் இலங்கையில் தமிழ் மக்களும் ஏனைய சமூகக் குழுக்களும் 25 வருடங்களாக கற்பனை செய்ய முடியாத துயரங்களில் சிக்குண்டனர்.

தசாப்த காலவன்முறையும் அழிவும் எண்ணிக்கையற்ற இலங்கையர்களின் மரணத்துக்கு காரணமாக அமைந்துள்ளன.

அமைதியையும் சுதந்திரத்தையும் தவிர வேறு எதனையும் வேண்டாத ஆயிரக்கணக்கான தமிழர்கள் மோதலின் இறுதி மாதங்களில் கொல்லப்பட்டனர்.

தமிழ் இனப்படுகொலை நினைவேந்தல் தினத்தில் இலங்கையின் உள்நாட்டு யுத்தத்தின் இறுதித் தருணங்களில் கொல்லப்பட்ட ஆயிரக்கணக்கான மக்களின் நினைவுகளை நாங்கள் கௌரவிக்கின்றோம்.

கொல்லப்பட்ட-பாதிக்கப்பட்ட-அறிந்தவர்கள் அறியாதவர்களை, இலங்கையின் வரலாறில் இருண்ட யுகத்தில் இனப்படுகொலை யுத்தக் குற்றங்கள், அநீதிகளால் பாதிக்கப்பட்டவர்களை நாங்கள் நினைவு கூருகின்றோம்.

கடந்த காலங்களின் காயங்களை எதிர்காலத்திற்கான நம்பிக்கைகளாக மாற்ற முடியும்.

ராஜபக்ஷ அரசாங்கத்தை எதிர்ப்பதில் உலகிற்கு தலைமை தாங்கிய கனடாவின் முன்னைய கொன்சவேர்ட்டிவ் அரசாங்கங்களை தற்போதைய அரசாங்கம் பின்பற்றவேண்டும். ராஜபக்ஷ அரசாங்கம் இழைத்த இனப்படுகொலை மற்றும் ஏனைய கண்டித்தக்க குற்றங்களுக்கு எதிர்ப்பு தெரிவித்து 2013 இல் பொதுநலவாய உச்சிமாநாட்டை கனடா புறக்கணித்தது. ஏனைய நாடுகளும் இதனை பின்பற்றி ராஜபக்ஷ ஆட்சியாளர்களை புறக்கணிக்கும் நிலையை ஏற்படுத்தியது. உலகம் தமிழ் மக்களுக்கு ஆதரவாக நின்றது.

இந்த இனப்படுகொலையில் ஈடுபட்டவர்களை பொறுப்புக்கூறுமாறு கொன்சவேர்ட்டிவ்கள் இன்று வேண்டுகோள் விடுக்கின்றனர். குறிப்பாக முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை கைது செய்யவேண்டும் என்ற இலங்கையின் மனித உரிமை பரப்புரையாளர்களின் வேண்டுகோள்களுடன் நாங்கள் இணைந்துகொள்கின்றோம். இதன் மூலம் அவர் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் தனது குற்றங்கள் குறித்து பதிலளிக்க முடியும்-என்றுள்ளது. (அ)

# இலங்கைக்கு தொடர்ந்தும் ஆதரவளிக்க சீனா தயார்!

## யுனான் மாகாண ஆளுநர் உறுதி

கொழும்பு, மே 20

**சீனாவின் யுன்னான் மாகாணத்துக்கும் இலங்கைக்கும் இடையில் நெருங்கிய ஒத்துழைப்பை ஏற்படுத்துவதற்கான வழிமுறைகளை ஆராயுமாறு யுன்னான் மாகாண ஆளுநர் வாங் யூபோ தெரிவித்துள்ளார்.**



சீனாவின் யுன்னான் மாகாண ஆளுநர் வாங் யூபோ மற்றும் பிரதமர் தினேஷ் குணவர்த்தன ஆகியோருக்கு இடையில் அலரி மாளிகையில் இடம்பெற்ற சந்திப்பின்போதே அவர் இதனைத் குறிப்பிட்டார்.

அத்துடன் கல்வி மற்றும் தொழிநுட்பத் திறன் மேம்பாட்டுக்கு இலங்கைக்கு தொடர்ந்தும் ஆதரவளிக்கத் தயாராக இருப்பதாகவும் அவர் கூறினார்.

யுன்னான் மாகாண ஆளுநர் கொழும்பின் சில முக்கிய பகுதிகளை பார்வையிட்டதுடன் கண்டி, பொலனறுவை மற்றும் கிழக்கு மாகாணத்துக்கு விஜயம் செய்யவுள்ளார்.

அத்துடன் குறித்த பகுதிகளிலுள்ள பாடசாலைகளுக்கு 25 மில்லியன் ரூபா பெறுமதியான பாடசாலை உபகரணங்கள், மற்றும் உணவுப் பொதிகள் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# காய்ச்சலுக்கு பரசிற்றமோல் அல்லாத மருந்துகளை பயன்படுத்தவேண்டாம்!

கொழும்பு, மே 20

நாட்டில் தற்போது வேகமாக வைரஸ் காய்ச்சல் பரவிவரும் நிலையில், பரசிற்றமோல் அல்லாத மருந்துகளைப் பயன்படுத்த வேண்டாம் விசேட வைத்தியர் உபுல் திசாநாயக்க பொது மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

நாட்டில் வைரஸ் காய்ச்சல், டெங்கு மற்றும் இன்புளுவென்சா என 3 காய்ச்சல் வகைகள் பரவிவருவதாகத் தெரிவித்துள்ள அவர், இதில் தங்களுக்கு ஏற்பட்டுள்ள காய்ச்சல் எந்த வகை என அறியாமல் பரசிற்றமோல் அல்லாத மருந்துகளைப் பயன்படுத்தவேண்டாம் என கூறியுள்ளார்.

பரசிற்றமோல் அல்லாத வலி நிவாரணி எடுத்தால் இரத்தக்கசிவு ஏற்பட்டு ஈரல் பாதிக்கப்படுவதுடன் மரணம் ஏற்படக்கூடிய நிலைமை ஏற்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இன்புளுவென்சா மிகக் கடுமையாகப் பரவும் என்றும், நோய் எதிர்ப்புச் சக்தி உள்ளவர்களுக்கு வந்தால், இரண்டு அல்லது மூன்று நாள்களுக்குக் காய்ச்சலும், நீண்ட நாள் இருமலும் வரலாம் என்றும் அவர் தெரிவித்தார்.

இதனால் நீண்டகால சுவாச நோய் உள்ளவர்களுக்கு பெரிய அளவில் பிரச்னைகள் ஏற்படாது என்றும், சுவாச நோய் உள்ளவர்கள் முதல் முதியவர்கள் வரை அனைத்து அரசு மருத்துவமனைகளிலும் காய்ச்சலுக்கான வைரஸ் தடுப்பு மருந்துகள் இருப்பதாகவும் வைத்தியர் உபுல் திசாநாயக்க மேலும் குறிப்பிட்டார். (அ)

# பாடப்புத்தகம் விநியோகம் 95 வீதமான பணிகள் நிறைவு

கொழும்பு, மே 20

நாடு முழுவதும் உள்ள பாடசாலைகளுக்கு 95 வீதமான பாடப்புத்தகங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளதாகவும், மொத்த விநியோகம் இன்னும் இரண்டு வாரங்களில் நிறைவடையும் என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.



குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கும் பொருளாதாரச் சிரமங்களை எதிர்நோக்கும் மாணவர்களுக்கும் உயர்தர கல்விக்கான புலமைப்பரிசில்களை வழங்கும் நிகழ்வில் உரையாற்றிய அமைச்சர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

2023 ஆம் ஆண்டிற்கான பாடப்புத்தகங்களை அச்சிடுவதற்கான பொருட்களை வழங்குவதில் இந்திய தூதரகம் எங்களுக்கு ஆதரவளித்தது.

மூன்று மொழிகளில் 350 வகையான பாடப்புத்தகங்களை அச்சிட அரசாங்கம் 16 பில்லியன் ரூபாவை செலவிட்டுள்ளது. இது முந்தையதை விட நான்கு மடங்கு அதிகம்.-என்றார். (அ)

# புணிப்புறக்கணிப்புக்கு தயாராகும் தனியார் பஸ் உரிமையாளர் சங்கம்

கொழும்பு, மே 20

ஒருநாள் சேவைப் புறக்கணிப்பை மேற்கொள்வதற்கு, இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம், தயாராகிறது.

பயணிகள் போக்குவரத்து பஸ்களில் இருந்து, அதிகளவு புகை வெளியேறுவது தொடர்பில், மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களம் சோதனை நடவடிக்கைகளை மேற்கொள்கிறது.

இந்த சோதனை நடவடிக்கைகள், உனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

அவ்வாறு நடவடிக்கை எடுக்காத பட்சத்தில், ஒருநாள் சேவைப் பணிபுறக்கனிப்பில் ஈடுபட உள்ளதாக இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன எச்சரித்துள்ளார்.

நாட்டில் உதிரிப் பாகங்கள் இல்லாதமையாலும், அவற்றின் விலை உயர்வு காரணமாகவும், பேருந்துகள் அதிகளவில் புகையினை வெளியிடுவதாக அவர் குறிப்பிட்டார்.

இலங்கையில் தரமற்ற டீசல் விற்பனை செய்யப்படுகின்றது.

அவ்வாறு விற்பனை செய்யப்படுவதால், வாகனத்தில் அதிகளவான புகை வெளியேற்றப்படுவதாக இலங்கை தனியார் பேரூந்து உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்தார். (அ)

# கடலட்டைகளுடன் இருவர் கைது

கொழும்பு, மே 20

இந்தியாவிலிருந்து சட்டவிரோதமாக பொருட்களைக் கொண்டுவந்த படகு ஒன்றை, புத்தளம் சின்ன அறிச்சாறு பகுதியில் வைத்து, கடற்படையினர் கைப்பற்றியுள்ளனர்.

சட்டவிரோதமாக கடலட்டைகள் கொண்டுவரப்படுவதாக கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலுக்கமைய நேற்று முன்தினம் இரவு சின்ன அறிச்சாறு கடற்கரைப் பகுதியில், கற்பிட்டி கடற்படையினர் படகொன்றைச் சோதனையிட்டுள்ளனர்.

இதன்போது, 193 கிலோகிராம் உலர்ந்த கடலட்டைகள் உள்ளிட்ட பல பொருட்களுடன் இரண்டு சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டதாக கடற்படை தெரிவித்துள்ளது. (அ)

# எக்ஸ்பிரஸ் பேர்ள் பாதிப்புக்கு நட்டஈடு; மீனவர் அமைப்புகள் மனுத் தாக்கல்!

கொழும்பு, மே 20

இலங்கைக் கடலில் மூழ்கிய, எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலால் ஏற்பட்ட பாதிப்புக்கு நட்டஈட்டை செலுத்துமாறு கோரி மீனவ அமைப்புகளின் பிரதிநிதிகள் உள்ளிட்ட 18 பேர் கொழும்பு வர்த்தக மேல் நீதிமன்றில் மனு தாக்கல் செய்துள்ளனர்.

இந்த மனுவை அனைத்து மீனவ மக்கள் தொழிற்சங்கத்தின் தலைவர் அருண ரொசாந்த பெர்னாண்டோ உள்ளிட்ட தரப்பினர் நேற்றுமுன்தினம் தாக்கல் செய்தனர்.

இந்த மனுவின் பிரதிவாதிகளாக கப்பலுடன் தொடர்புடைய செயற்பாடுகளை முன்னெடுக்கும் சிங்கப்பூர், பிரித்தானியா உள்ளிட்ட வெளிநாட்டு நிறுவனங்கள், சுற்றாடல், மீன்பிடி மற்றும் துறைமுகம் ஆகியவற்றுக்கான அமைச்சர்கள் உள்ளிட்ட 17 பேர் பெயரிடப்பட்டுள்ளனர்.

# பொருள்களின் விலைகள் குறைக்கப்படுதல் அவசியம்

கொழும்பு, மே 20

டொலருக்கு நிகரான ரூபாவின் பெறுமதியின் பலனை மக்களுக்கு வழங்கும் வகையில் அரசாங்கம் விசேட வேலைத்திட்டமொன்றை அமுல்படுத்தி வருவதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்தார்.

ருவன்வெல்ல பகுதியில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்துரைக்கும்போதே அவர் இதனைத் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- டொலரின் பெறுமதி குறைவடையும்போது பொருட்களின் விலைகளும் நியாயமான முறையில் விதிக்கப்படவேண்டும்.

அத்துடன் இந்த விடயம் தொடர்பில் நிதி அமைச்சின் வர்த்தக கொள்கைத் துறை, மற்றும் நுகர்வோர் விவகார அமைச்சு என்பன ஆராய்ந்து வருகின்றன.

இதேவேளை பாடசாலை உபகரணங்கள் உள்ளிட்ட ஏனைய அத்தியாவசியப் பொருட்களின் விலைகளை குறைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்-என்றார். (அ)

# ஜெரோம் பெர்னாண்டோவின் சொத்து குறித்து விசாரணை

கொழும்பு, மே 20

போதகர் ஜெரோம் பெர்னாண்டோவுக்கு சொந்தமான சொத்துக்கள் மற்றும் உடைமைகள் பற்றிய விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஜெரோம் பெர்னாண்டோ ஆராதனையில் ஈடுபடும் கட்டுநாயக்க - வெயங்கொட வீதியிலுள்ள மிரக்கிள் டோம் எனும் கிறிஸ்தவ ஆலயத்தின் பெறுமதி சுமார் 9 மில்லியன் அமெரிக்க டொலர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆலயம் அமையப் பெற்றுள்ள 4 ஏக்கர் இடத்தை, போதகர் ஜெரோம் பெர்னாண்டோவின் சபையின் உறுப்பினர்களான ஒரு தம்பதிகள் வாங்கிக் கொடுத்துள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அத்துடன், கல்கிஸை மற்றும் ஹெவ்லொக் சிற்றி போன்ற பகுதிகளிலும் போதகரின் பெயரால் 2 அடுக்குமாடி கட்டடங்கள் உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மேலும், லண்டன், ஐரோப்பா, அமெரிக்கா, ஹொங்கொங், டுபாய், அவுஸ்திரேலியா, இந்தியா மற்றும் பங்களாதேஷ் ஆகிய நாடுகளில் இருந்து இலங்கைக்கு வரும் மக்களிடம் போதகர் ஜெரோம் பெர்னாண்டோவின் சபைக்கான உதவித் தொகை பெறப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த சபைக்கு உதவித்தொகையாக செலுத்தக்கூடிய குறைந்தபட்ச தொகை ஐந்து இலட்சம் ரூபாய் எனவும் கண்டறியப்பட்டுள்ளது.

இந்த சபையினால் பெறப்படும் பணம் டுபாய், கட்டார் மற்றும் இங்கிலாந்து ஆகிய நாடுகளில் உள்ள கணக்குகளில் வைப்பிலிடப்பட்டுள்ளதாகவும் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (அ)

# சிறுமியைத் தாக்கிய ஆசிரியை கைதானார்

அம்பாறை, மே 20

ஐந்து வயது சிறுமியியை கொடூரமாக தாக்கிய ஆசிரியை கைது செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அம்பாறை - பானம பிரதேசத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் கல்வி கற்பிக்கும் 54 வயதான ஆசிரியை ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த பாடசாலையில் பயிலும் ஐந்து வயது சிறுமியின் காதில் குறித்த ஆசிரியர் கொடூரமாக தாக்கியதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன், சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட 54 வயதுடைய ஆசிரியர் தாக்குதலுக்கு உள்ளான சிறுமியின் வகுப்பு ஆசிரியை என்றும் பொலிஸார் கூறினர்.

ஆசிரியையின் கொடூர தாக்குதலுக்கு உள்ளான சிறுமி மருத்துவ பரிசோதனைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (அ)

# வழிப்பறியில் ஈடுபட்ட பொலிஸ் அலுவலர்!

கொழும்பு, மே 20

பெண் ஒருவரிடம் தங்கச்சங்கிலியை கொள்ளையிட்ட பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரை பொதுமக்கள் மடக்கிப் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்த சம்பவம் ஒன்று மஹவஸ்கடுவ பகுதியில் பதிவாகியுள்ளது.

இந்த சம்பவம் நேற்று முன்தினம் பதிவாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பதுரலிய பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரே இவ்வாறு வழிபறியில் ஈடுபட்டுள்ளார்.

இந்த நிலையில் குறித்த பொலிஸ் உத்தியோகத்தரை களுத்துறை வடக்கு பொலிஸாரிடம் ஒப்படைக்க பொது மக்கள் நடவடிக்கை எடுத்தனர். (அ)

# ஒன்லைனில் பொருட்களை விற்பனை செய்ய கட்டுப்பாடு

கொழும்பு, மே 20

ஒன்லைன் மூலம் பொருட்களை விற்பனை செய்வதை ஒழுங்குபடுத்தும் வர்த்தமானி அறிவிப்பை நுகர்வோர் விவகார அதிகாரசபை வெளியிட்டுள்ளது.

அதன்படி, ஒரு ஒன்லைன் வர்த்தக தளத்தில் ஒரு தயாரிப்பை விளம்பரப்படுத்தும் போது எந்த பிரதிநிதித்துவத்தையும் மறுப்புகளையும் செய்யக்கூடாது.

குறித்த வர்த்தமானி அறிவிப்பில், ஒரு பொருளின் உண்மையான கொள்முதல் விலையானது, ஒன்லைன் வர்த்தகத் தளத்தில் காட்டப்படும் விலைக்குச் சமமாக இருப்பதை உறுதி செய்ய வேண்டும்.

மேலும், பொருள் உறுதிப்படுத்தல், போக்குவரத்து ஏற்பாடுகள், பொருள் முன்பதிவை ரத்து செய்வதற்கான உரிமை ஆகியவையும் இந்த வர்த்தமானி அறிவித்தலின் மூலம் ஒழுங்குபடுத்தப்படுகின்றன. (அ)

# டிஜிற்றல் பொருளாதாரத்தை நோக்கி நாட்டை நகர்த்தும் பணி துரிதமாகும்!

## ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

கொழும்பு, மே 20

**நாட்டை டிஜிற்றல் பொருளாதாரத்தை நோக்கிக் கொண்டு செல்லும் பணியை துரிதப்படுத்துவது தொடர்பிலான அறிக்கையொன்றை ஒரு மாதத்துக்குள் சமர்ப்பிக்குமாறு துறை சார் இராஜாங்க அமைச்சர் மற்றும் அதிகாரிகளுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார்.**

கொழும்பு 08, எல்விட்டிகல மாவத்தையில் நிறுவப்பட்டுள்ள டராஸ் தலைமையகத்தை திறத்து வைக்கும் நிகழ்வில் உரையாற்றியபோதே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார்.

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் வரி சேகரிப்பு பணிகளுக்காக நிறுவப்பட்டுள்ள வருமான நிர்வாக முகாமைத்துவ தகவல் கட்டமைப்பான ரெமிஸ் தொடர்பில் 1993 ஆம் ஆண்டில் தாம் பிரதமராக பதவி வகித்தபோது ஆராயப்பட்டதாக ஜனாதிபதி தெரிவித்தார். ஆனால் 2023 இலும் அதனை பற்றி பேசிக்கொண்டிருப்பது கவலைக்குரியதெனவும் நாட்டை டிஜிட்டல் பொருளாதாரத்தை நோக்கி கொண்டுச் செல்லும் பணியை ஒருபோதும் தாமதப்படுத்தக்கூடாது என்பதோடு, அதனை துரிதப்படுத்துவதற்கு நிகரான பலன்களைப் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதன்போது டிஜிற்றல் பெயர் பலகைக்கு ஒளியூட்டி, டராஸ் தலைமையகத்தை உத்தியோகபூர்வமாக திறத்து வைத்த ஜனாதிபதி, கட்டடத் தொகுதியை பார்வையிட்டதன் பின்னர் அதன் பணிப்பாளர்கள் குழுவுடனும் கலந்துரையாடினார்.

இலங்கையின் டிஜிற்றல் மயமாக்கலை துரிதப்படுத்தும் வகையில் "ஈ - வணிகம்" யுகத்தின் ஆரம்பமாக டராஸ் நிறுவனத்தை இலங்கையில் நிறுவியமைக்காக அலிபாபா நிறுவனத்திற்கு ஜனாதிபதி நன்றி தெரிவித்தார்.

ஜனாதிபதி மேலும் தெரிவிக்கையில்-



நாம் இப்போது "ஈ - வணிகம்" யுகத்திலேயே வாழ்கிறோம். இருப்பினும் எமது நாட்டிற்குள் ஈ - வணிகச் செயல்பாடுகளை ஆரம்பிப்பதற்கு தாமதமாகிவிட்டது. டிஜிற்றல் மயமாக்கலை எவ்வாறு செய்யலாம் என்பது குறித்து அமைச்சர், செயலாளர், அதிகாரிகளுடன் நான் கலந்தாலோசித்தபோது அது தொடர்பிலான அறிக்கையொன்றை ஒரு மாதத்திற்கு பெற்றுத்தருமாறு அவர்களுக்கு பணிப்புரை விடுத்தேன்.

நாட்டிற்குள் டிஜிற்றல் பொருளாதாரத்தை உருவாக்குவதற்கான அனைத்துவித முயற்சிகளையும் நாம் முன்னெடுப்போம். இந்த செயல்பாட்டை புதிதாக அமைக்க வேண்டிய அவசியம் இல்லை.தென் இந்தியாவின் தமிழ் நாட்டில் இந்த திட்டத்தை வலுவாக முன்னெடுத்துச் செல்வதற்கு அவசியமான இணையத்தள முறைமைகள் காணப்படுகின்றன.

அது தொடர்பில் நான் இந்தியாவுடன் பேச்சுக்களை முன்னெடுக்கத் தயாராக இருக்கின்றேன். தமிழ் மற்றும் ஆங்கிலம் போன்ற இலங்கையில் பயன்பாட்டில் உள்ள மொழிகளே அங்கும் காணப்படுவதால் மேற்படி பணிகள் மேலும் எளிதாகும்.

டிஜிற்றல் மற்றும் பசுமை பொருளாதாரம் ஆகியவற்றை ஒன்றாக மேம்படுத்தவேண்டியது அவசியமாகும். பசுமை பொருளாதாரம் இன்று ஆசியாவின் வியாபாரச் செயற்பாடாக மாறியுள்ளது. அந்த பொருளாதாரத்தின் பெறுமதி 5 ட்ரில்லியன் ஆகும். அதனை ஆரம்பிப்பதற்கு நமக்கு 5 ட்ரில்லியன்கள் அவசியமில்லை. சில பில்லியன்கள் போதுமானது. அதனால் இந்த வேலைத்திட்டங்களோடு டிஜிட்டல் மயமாக்கலுக்குள் பிரவேசிக்கவேண்டியது அவசியமாகும்.அதற்காக நாம் ஒருபோதும் பின்வாங்கக் கூடாது - என்றார். (அ)

# உமா ஓயா நீர்மின் உற்பத்தி முதல் பிரிவு விரைவில் தேசிய மின் கட்டமைப்புடன்!

கொழும்பு, மே 20

உமா ஓயா, நீர்மின் உற்பத்தி நிலையத்தின், முதலாம் பிரிவை, எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் முதல், தேசிய மின் கட்டமைப்புடன் இணைக்கலாம் என மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

குறித்த வேலைத்திட்டத்தை முன்னெடுக்கும் நிறுவனப் பிரதிநிதிகளுடன் இடம்பெற்ற சந்திப்பில், அமைச்சர் இதனைக் கூறினார்.

எதிர்வரும் செப்ரெம்பர் மாதமளவில், உமா ஓயா, நீர்மின் உற்பத்தி நிலையத்தின், இரண்டாம் பிரிவின் மின் உற்பத்திப் பணிகளை ஆரம்பிக்க முடியும் என, சம்பந்தப்பட்ட நிறுவனப் பிரதிநிதிகள் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த மின்னுற்பத்தி நிலையம் ஊடாக, தேசிய மின் கட்டமைப்புக்கு, 120 மெகாவொட் மின்சாரம் இணைக்கப்பட உள்ளதாக தெரவிக்கப்பட்டுள்ளது. (அ)

# இந்திய சுற்றுலா மாநாடு இந்த முறை இலங்கையில்

கொழும்பு, மே 20

இந்திய சுற்றுலா முகவர் சங்கம் தமது வருடாந்த மாநாட்டை இந்த முறை இலங்கையில் நடத்த தீர்மா னித்துள்ளது.

இந்த மாநாடு எதிர்வரும் ஜூலை மாதம் இடம்பெறவுள்ளதாக சுற்றுலா அமைச்சர் ஹறின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

இந்த மாநாட்டில் அந்த நாட்டின் 450 உயர்மட்ட வர்த்தக பிரதிநிதிகள் பங்கேற்கவுள்ளனர்.

இலங்கையின் சுற்றுலாத்துறைக்கு நன்மை பயக்கும் வகையில் இந்த மாநாடு அமைவதாக அமைச்சர் ஹறின் பெர்னாண்டோ கூறினார். (அ)

# பாராளுமன்ற விவாதத்தை நேரில் காண சந்தர்ப்பம் கோருகிறார் ஜனக ரத்நாயக்க

கொழும்பு, மே 20

பாராளுமன்ற விவாதத்தை நேரில் காணத் தனக்கும் தன் பிள்ளைகளுக்கும் சந்தர்ப்பம் வழங்குமாறு பொது பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தசநாயக்கவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

குறித்த கடிதம் கடந்த 17ஆம் திகதி அவரால் பாராளுமன்ற செயலாளர் நாயகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்றத்தில் எதிர்வரும் 24ஆம் திகதி நடைபெறவுள்ள வாக்கெடுப்பை காண்பதற்கே தனக்கும் தனது இரண்டு பிள்ளைகளுக்கும் சந்தர்ப்பம் வழங்குமாறு கோரி இந்த கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# மோசடியான முறையில் கடவுச்சீட்டு தயாரித்து வழங்கிய 9 பேர் சிக்கினர்!

கொழும்பு, மே 20

குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்துக்கு அருகில் காத்திருந்த மக்களிடம் பணம் பெற்ற 9 பேர் பொலிஸ் புலனாய்வு பிரிவினரால் நேற்று வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டனர் என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த சந்தேக நபர்கள், சேவைகளை பெற்றுக் கொள்வதற்காக வரும் நபர்களிடம் இருந்து பணத்தைப் பெற்றுக் கொண்டு கடவுச்சீட்டுகளை மோசடியான முறையில் தயார் செய்து வழங்கியதாகவும் அமைச்சு மேலும் கூறியுள்ளது.

# இந்தியா எதிர் சீனா:

## கடற்படையை வலுப்படுத்தும் இந்தியா

## இந்திய - பசுபிக் கடலில் என்ன நடக்கிறது?



இந்தியா அதன் ராணுவ பலத்தை அதிகரித்துக் கொள்ளும் நோக்கில், குறிப்பாக கடற்படை திறனை மேம்படுத்திக் கொள்ள ஆசியாவின் பிற நாடுகளுடன் இணைந்து கூட்டு ராணுவ ஒத்திகைகளை மேற்கொள்வதை சீனா தீவிரமாக கண்காணிப்பதாக இந்திய ஊடகங்கள் அண்மையில் பரவலாக குற்றம்சாட்டி இருந்தன.

இந்திய - பசிபிக் பிராந்தியத்தை தனது கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்ள சீனா விரும்புவதை அடுத்து, இந்த பகுதியில் தமது பாதுகாப்பை உறுதி செய்து கொள்ளும் வகையில், கடற்படையை பலப்படுத்தும் முயற்சிகளில் இந்தியா இறங்கி உள்ளதாக ஊடகங்களின் சமீபத்திய செய்திகள் தெரிவிக்கின்றன.

சீனா உடனான எல்லை பிரச்னைக்கு தீர்வு காணும் நோக்கில் அண்மையில் நடத்தப்பட்ட இரு தரப்பு பேச்சுவார்த்தையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்படவில்லை. இந்த பின்னணியில் கடற்படையை நவீனப்படுத்துவது மற்றும் வலுப்படுத்தும் முயற்சிகளில் இந்தியா இறங்கி உள்ளது.

பிற ஆசிய நாடுகளுடன் ராணுவ கூட்டுப் பயிற்சிகளை மேற்கொள்வது, புதிய வகை நீர்மூழ்கி கப்பல்களை கடற்படையில் இணைப்பது, ராணுவத்துக்கு நவீன போர் ஆயுதங்களை வாங்குவது போன்ற நடவடிக்கைகளை இந்தியா மேற்கொண்டுள்ளது.

**இந்தியாவின் கடல்சார் முயற்சிகள் என்ன?**

இந்திய பெருங்கடல் பகுதியில் சீனா



வின் ஆளுமை வளர்ந்து வரும் நிலையில், தமது கடற்படை திறனை மேலும் மேம்படுத்த வேண்டிய அவசியம் இந்தியாவுக்கு உள்ளது. புதிய நீர்மூழ்கி கப்பல்களை கட்டமைப்பது முதல் தென்கிழக்கு ஆசிய நாடுகளுடனான ராணுவ ஒத்துழைப்பை விரிவுபடுத்துவது வரை பல்வேறு நடவடிக்கைகள் இவற்றில் அடங்கும்.

இந்தியாவிடம் தற்போதுள்ள 17 நீர்மூழ்கி கப்பல்கள், 2023 ஆம் ஆண்டு தொடக்கத்தில் கடற்படையில் சேர்க்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. ஆனால் சீனாவிடம் இருக்கும் நீர்மூழ்கி கப்பல்களின் எண்ணிக்கை இதை விட கிட்டத்தட்ட மும்மடங்கு அதிகம்.

இதுவே, 2020 இல் சீன கடற்படை வசம் இருந்த நீர்மூழ்கி கப்பல்களின் எண்ணிக்கை 66. இவற்றில் டீசல் மற்றும் அணுசக்தியில் இயங்கும் நீர்மூழ்கி கப்பல்கள், ஏவுகணை தாங்கி கப்பல்கள் உள்ளிட்டவை அடங்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

பிரான்ஸ் கடற்படையுடன் இணைந்து **Air independent propulsion (AIP)** தொழில்நுட்பத்துடன் கூடிய டீசலில் இயங்கும் மூன்று நவீன நீர்மூழ்கி கப்பல்களை உள்நாட்டிலேயே வடிவமைக்கும் முயற்சிகளை இந்திய கடற்படை முன்னெடுத்துள்ளதாக ஹிந்துஸ்தான் டைம்ஸ் நாளிதழ் சமீபத்தில் செய்தி வெளியிட்டிருந்தது.

மும்பையில் உள்ள மசாகன் கப்பல் கட்டும் நிறுவனம், இந்த நீர்மூழ்கி கப்பல்களை கட்டமைக்க உள்ளது. ஐஎன்எஸ் வக்ஷீர் என்று பெயரிடப்பட்டுள்ள இந்த கப்பல், 2024 ஆம் ஆண்டு தொடக்கத்தில் இந்திய கடற்படையில் சேர்க்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பிரான்ஸ் கடற்படையின் ஸ்கார்பீன் வகை நீர்மூழ்கி கப்பல்களின் வடிவமைப்பை அடிப்படையாகக் கொண்டு, ஆறு கல்வாரி வகை நீர்மூழ்கி கப்பல்களை மசாகன் நிறுவனம் ஏற்கெனவே கட்டமைத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

இருப்பினும், 2025 இல் 400 கப்பல்கள், 2030 இல் 440 கப்பல்கள் என, எதிர்காலத்தில் சீன கடற்படையின் ஒட்டுமொத்த போர் திறன் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

நவீன நீர்மூழ்கி கப்பல்கள் கட்டுமானத்தை தவிர, கண்காணிப்புப் பணிகளுக்காக ட்ரோன்களை கொள்முதல் செய்யும் நடவடிக்கையையும் இந்தியா முடுக்கி விட்டுள்ளது.

அந்தமான் நிகோபார் தீவுகளுக்கு அருகே உள்ள பகுதிகளை கண்காணிக்கும் நோக்கில், குத்தகைக்கு வாங்கப்பட்ட **MQ -9** வகை ட்ரோன்களை இந்த ஆண்டு தொடக்கத்தில் இந்தியா அங்கு அனுப்பியதாக 'இந்தியா டுடே'வின் மற்றொரு அறிக்கை தெரிவிக்கின்றது.

வங்காள விரிகுடாவில் மியான்மரின் கோகோ தீவுக்கு அருகே உள்ள இந்த பகுதிகளில், ராணுவ தளத்தை மேம்படுத்திக் கொள்ள, அந்நாட்டுக்கு சீனா உதவுவதாக கூறப்படுகிறது.

முப்படைகளுக்காக **MQ-9 Reaper** வகை ட்ரோன்களை அமெரிக்காவிடம் இருந்து வாங்க இந்தியா திட்டமிட்டுள்ளதாக, 2022 டிசம்பரில் ஊடகங்களில் தகவல் வெளியாகி இருந்தது.

**பிற நடவடிக்கைகள் என்ன?**

இந்திய - சீன எல்லையில் உள்கட்டமைப்பு பணிகளை துரிதப்படுத்துவதில் தொடங்கி, கடற்படையை வலுப்படுத்துவது வரை இந்தியா பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

அத்துடன், புதிய ஹெலிகாப்டர்கள், நவீன ஏவுகணைகள் மற்றும் பீரங்கி குண்டுகள் உள்ளிட்டவற்றை வாங்கும் திட்டத்துக்கு இந்திய அரசு கடந்த மார்ச் மாதம் ஒப்புதல் அளித்திருந்தது.

இந்த திட்டத்தின் மொத்த மதிப்பு ரூ.705 பில்லியன் (8.5 பில்லியன் டாலர்கள்). இதில் 80 சதவீதம் அளவுக்கு, பிரமோஸ் சூப்பர்சோனிக் ஏவுகணை தயாரிப்பு, நவீன போர் ஹெலிகாப்டர்கள் உள்ளிட்டவற்றை வாங்குவதற்காக, இந்திய கடற்படையிடம் இருந்து முன்மொழிவுகள் பெறப்பட்டுள்ளன.

இந்திய பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம், ரஷ்யாவுடன் இணைந்து உருவாக்கியுள்ள பிரமோஸ் ஏவுகணைகளை பிலிப்பைன்ஸுக்கு ஏற்றுமதி செய்ய, அந்த நாட்டுடன் 375 மில்லியன் டாலர்கள் மதிப்பிலான ஒப்பந்தத்தையும் இந்தியா போட்டுள்ளது.

**சமீபத்திய கூட்டுப் பயிற்சிகள் முக்கியத்துவம் பெறுவது ஏன்?**

தென் சீன கடல் எல்லையில் அந்நாடு செலுத்தி வரும் ஆதிக்கம் குறித்த தமது கவலையை இந்தியா கடந்த ஏப்ரலில் வெளிப்படுத்தி இருந்தது. இதே போக்கில், இந்தியப் பெருங்கடலில் சீன கடற்படை மூக்கை நுழைக்காது என்பதை சீனா உறுதிப்படுத்தவும் இந்தியா விரும்புவதாக 'ஹிந்துஸ்தான் டைம்ஸில்' அப்போது தகவல் வெளியாகி இருந்தது.

இந்த கவலையின் காரணமாகவே, தென் சீன கடல் எல்லைப் பகுதிகளில் சீனாவுடன் பிராந்திய பிரச்னைகளை கொண்டிருக்கும் வியட்நாம், மலேசியா, பிலிப்ஃபைன்ஸ் உள்ளிட்ட கிழக்காசிய நாடுகளுடனான தமது ராணுவ ஒத்துழைப்பை இந்தியா விரிவுப்படுத்தி உள்ளது.

ஆசியான் -இந்தியா கடல்சார் கூட்டுப் பயிற்சி கடந்த 8 ஆம் தேதி மேற்கொள்ளப்பட்டது. தென் சீன கடல் எல்லையில் இந்தியா முதல் முறையாக மேற்கொண்ட இந்தக் கூட்டுப் பயிற்சி, சிங்கப்பூரில் உள்ள சாங்கி கடற்படை தளத்தில் தொடங்கப்பட்டது.

இந்த கடற்படை கூட்டுப் பயிற்சி மேற்கொள்ளப்பட்ட பகுதிக்கு அருகில், சீன போர் கப்பல்கள் தென்பட்டதாக இந்திய ஊடகங்கள் முக்கிய செய்தி வெளியிட்டிருந்தன.

மற்றொரு முக்கிய நிகழ்வாக, இந்திய கடற்படையின் ஐஎன்எஸ் சிந்துகேசரி, தென்கிழக்கு ஆசிய பிராந்தியத்தில் பெரிய நாடான இந்தோனீசியாவில் கடந்த பிப்ரவரியில் நிலை நிறுத்தப்பட்டது. இந்திய போர்க் கப்பல் ஒன்று இந்தோனீசியாவுக்கு பயணம் மேற்கொண்டது இதுவே முதல்முறை.

இந்தியாவும் ஜப்பானும் வங்கக் கடல் பகுதியில் கடந்த ஆண்டு கூட்டு ராணுவ ஒத்திகையில் ஈடுபட்டன.

இரு நாடுகளும் 2012 இல் முதல்முறையாக கடல்சார் கூட்டுப் பயிற்சி மேற்கொண்டவைதான். ஆனால், இந்தோ -பசிபிக் கடல் எல்லையில் சீனாவின் ஆதிக்கம் அதிகரித்துவரும் வேளையில், இந்தியா -ஜப்பான் இணைந்து கடந்த ஆண்டு மேற்கொண்ட கூட்டுப் பயிற்சி மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது.

அத்துடன், இந்திய -ஜப்பான் விமான படைகள் இணைந்து, இந்த ஆண்டு தொடக்கத்தில், "வீர் கார்டியன்" என்ற பெயரில் கூட்டுப் பயிற்சி மேற்கொண்டன. இது சீனாவுக்கு மறைமுக எச்சரிக்கை விடுப்பதாக அமைந்துள்ளது என்று ஹாங்காங்கில் இருந்து வெளிவரும் 'சவுத் சைனா மார்னிங் போஸ்ட' **(South China Morning Post)** வர்ணித்திருந்தது.

**இரு தரப்பு உறவுகளின் தற்போதைய நிலை என்ன?**

கிழக்கு லடாக்கில் கடந்த மூன்றாண்டுகளாக நீடித்து வரும் ராணுவ நடவடிக்கைகளின் காரணமாக இந்தியா -சீனா இருதரப்பு உறவு, அசாதாரண நிலையில் இருக்கிறது என்று இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் அண்மையில் கவலையுடன் தெரிவித்திருந்தார்.

சீன-இந்திய எல்லையில் பொதுவாக நல்ல சூழலே நிலவுகிறது என்று சீன வெளியுறவுத் துறை அமைச்சர் கின் காங் கூறியிருந்ததற்கு பதிலடியாக ஜெய்சங்கர் இவ்வாறு கூறியிருந்தார்.

மே 4 மற்றும் 5 ஆம் தேதிகளில் நடைபெற்ற ஷாங்காங் ஒத்துழைப்பு மாநாட்டின் ஒரு பகுதியாக, இந்திய -சீன எல்லைப் பிரச்னை குறித்தும் விவாதிக்கப்பட்டது.

அமைச்சர்கள் மற்றும் ராணுவ உயரதிகாரிகள் நிலையில் இந்த பேச்சு நடைபெற்றது. இதில், கிழக்கு லடாக்கில் அமைந்துள்ள எல்லைக் கட்டுப்பாடு கோட்டையொட்டி, சில பகுதிகளில் குவிக்கப்பட்டுள்ள துருப்புகளை முழுமையாக விலக்கிக் கொள்வதில் உள்ள முட்டுக்கட்டைகளை களைவதற்கான முடிவு எதுவும் எட்டப்படவில்லை. ●



ஈழநாடு



# போரில் பார்வையை இழந்த முன்னாள் போராளி தற்போது எப்படி இருக்கிறார்?

**ரஞ்சன் அருண் பிரசாத்**

இலங்கையில் இடம்பெற்ற உள்நாட்டு யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு, 14 வருடங்கள் பூர்த்தியாகினாலும், அதனால் ஏற்பட்ட பாதிப்புகள் எதிர்கால சந்ததி வரை பாதிப்புகளை ஏற்படுத்தியுள்ளது.

அவ்வாறு எதிர்கால சந்ததிக்கு பாதிப்பை ஏற்படுத்திய ஒரு கடல் கரும்புலி போராளியின் செய்தியே இது.

தமிழர்களின் உரிமைக்கான போராட்டத்தை 30 ஆண்டுகளுக்கும் மேலாக தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு முன்னெடுத்திருந்தது. அந்த அமைப்பில் இணைந்து கொண்ட பல்லாயிரக்கணக்கான போராளிகளில் கந்தசாமி சேயோனும் ஒருவராவார்.

யாழ்ப்பாணம் - கோப்பாய் பகுதியை பிறப்பிடமாகக் கொண்ட இவருக்கு, தற்போது 36 வயது. 2006ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பில் கந்தசாமி சேயோன் இணைந்துகொண்டுள்ளார்.

வவுனியாவிலிருந்து, விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டு பகுதியிலுள்ள வன்னி பிரதேசத்தில் உறவினரை பார்க்கச் சென்ற வேளையில், விடுதலைப் புலிகளினால் சேயோன் விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

வெளி மாவட்டத்திலிருந்து வருகை தந்தமையினாலேயே, சேயோன் விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். தனது உறவு முறை சகோதரி ஒருவர், விடுதலைப் போராட்டத்தின்போது வீர சாவடைந்ததை, விசாரணைகளின்போது சேயோன், விடுதலைப் புலிகளிடம் தெரிவித்துள்ளார்.

"அவளை பற்றிச் சொல்லிக் கொண்டிருந்தபோது, அவர்கள் என்னிடம் கேட்டார்கள், உங்கள் அக்கா இயக்கத்திற்கு வந்து வீர மரணம் அடைந்திருக்கின்றார். உங்களுக்கு எண்ணம் இல்லையா? உங்களுடைய வீட்டில் யாரும் பங்களிப்பு செய்யவில்லை," என விடுதலைப் புலி உறுப்பினர்கள், சேயோனிடம் தெரிவித்துள்ளனர்.







விடுதலைப் புலி உறுப்பினர்களின் விசாரணைகளின் போது, சேயோன், விடுதலைப் புலிகளுடன் இணைந்து கொள்ள விருப்பம் தெரிவித்துள்ளார்.

அன்று முதல் தனது விடுதலைப் போராட்டத்தை ஆரம்பித்தார் சேயோன்.

விடுதலைப் புலிகள் கட்டாயப்படுத்தி, உங்களை இயக்கத்தில் இணைத்துக்கொண்டார்களா என சேயோனிடம் வினவியபோது,

"இல்லை. கட்டாய ஆட்சேர்ப்பானது 2008ஆம் ஆண்டு முதல்தான் ஆரம்பித்தது" என அவர் பதிலளித்தார்.

**விடுதலைப் புலிகளுடன் இணைந்தது முதல் கரும்புலி வரை**

2006ம் ஆண்டு விடுதலைப் புலிகளுடன் இணைந்ததை அடுத்து, தனக்கு அடிப்படை பயிற்சிகள் வழங்கப்பட்டதாக சேயோன் கூறுகின்றார்.

அதன்பின்னர் இரண்டாம் கட்ட பயிற்சிகள் வழங்கப்பட்டதாகவும், கடல் மற்றும் தரை ரீதியான பயிற்சிகள் வழங்கப்பட்டதாகவும் அவர் குறிப்பிடுகின்றார்.

இந்த பயிற்சிகள் முடிவடைந்ததை அடுத்து, படையணிக்கு தான் அனுப்பப்பட்டதாக கூறிய அவர், தனக்கு கரும்புலியில் இணைவதற்கு விருப்பம் என விடுதலைப் புலிகளிடம் கடிதம் ஊடாக கோரிக்கை விடுத்ததாகவும் குறிப்பிடுகின்றார்.

"என்னை படையணிக்கு விடும்போது நான், இரண்டாம் கட்ட பயிற்சி முகாமின் போது கடிதம் கொடுத்தேன். கரும்புலியில் இணைய போகின்றேன் என கடிதம் கொடுத்தேன். எனக்கு ஒரு வாரத்தின் பின்னர் அனுமதி கிடைத்தது. அதன் பின்னர் கடல் கரும்புலியில் இணைந்தேன். புகழரசன் செவ்வானம் படையணியில் இணைத்தார்கள். யுத்தம் முடியும் வரை கடல் கரும்புலியாகவே எனது கடமை இருந்தது" என கந்தசாமி சேயோன் தெரிவிக்கின்றார்.

இலங்கை ராணுவத்துடன் நடுக்கடலில் நடந்த 86 சண்டைகளில், சேயோன் நேரடியாக மோதியுள்ளார்.

"தரையில் சண்டை பிடித்தால், புத்து, வீழ்ந்த மரங்கள், குழிகள் போன்றவற்றை பாதுகாப்பு அரணாக பயன்படுத்த முடியும். ஆனால் கடலில் முப்படைகளும் தாக்கும். விமானப்படை, கடற்படை, தரைப்படை என முப்படைகளும் தாக்கும் இடம் தான் கடல்.

கடலில் யுத்தம் நடந்துகொண்டிருக்கும் போதே, குண்டு வீசும் விமானங்கள் வரும். உலங்கு வானூர்தி தாக்குதல் இருக்கின்றது. கடலில் கடற்படையின் தாக்குதல் இருக்கின்றது. தரையிலிருந்து பீரங்கி தாக்குதல் இடம்பெறும். அவை மூன்றுக்கும் முகம் கொடுத்துதான் நாங்கள் சண்டை பிடிக்க வேண்டும்," என்றார் கந்தசாமி சேயோன்.

முல்லைத்தீவிலிருந்தே விடுதலைப் புலிகளின் கடல் புலிகள் செயற்பட்டுள்ளது. முல்லைத்தீவிலேயே விடுதலைப் புலிகளின் படகுகளின் தளம் காணப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு, முள்ளி வாய்க்கால், வட்டுவாகல் போன்ற கடலில் படகுகளை இறக்கி, அவற்றை செலுத்திக் கொண்டு பருத்தித்துறை வரை சென்றே மோதல்கள் இடம் பெறும் என அவர் குறிப்பிடு கின்றார்.

தங்களின் விருப்பத்திற்கு அமைய சண்டையிட முடியாது எனவும், கட்டளைகளுக்கு கட்டுப்பட்டே சண்டைகளில் ஈடுபட வேண்டும் எனவும் அவர் கூறுகின்றார்.

**கண் பார்வையை இழந்த சேயோன்**

வவுனியாவில் தற்போது வாழ்ந்து வரும் கந்தசாமி சேயோன், யுத்தம் காரணமாக தனது இரண்டு கண்களையும் இழந்துள்ளார்.

இலங்கை ராணுவத்துடனான யுத்தம், சேயோனை, இருள் சூழ்ந்த ஒரு வாழ்க்கைக்கு தள்ளியுள்ளது. இது அவரை மாத்திரமன்றி, அவர் சார்ந்த மனைவி மற்றும் குழந்தைகளையும் பாதித்து, எதிர்காலத்தையே கேள்விக் குறியாக்கியுள்ளது.

யுத்தம் முடிவடைந்த பின்னரே சேயோன், கார்த்திகாவுடன் திருமண பந்தத்தில் இணைந்துக்கொண்டுள்ளார்.

சேயோன், அந்த சந்தர்ப்பத்தில் தனது ஒரு கண் பார்வையை இழந்த நிலையில், வவுனியாவில் கடமையாற்றிய கார்த்திகாவை காதலித்து திருமணம் செய்து கொண்டுள்ளார்.

அதன்பின்னரான காலத்தில் சேயோன், தனது இரண்டாவது கண்ணின் பார்வையையும் இயல்பாகவே இழந்துள்ளார்.

யுத்தம் ஏற்படுத்திய தாக்கமே, அவரது இரண்டாவது கண் பார்வை இழக்கப்படுவதற்கு காரணம் என மருத்துவர்கள் கூறுகின்றனர்.

குண்டுத் தாக்குதலின் பின்னர், அதன் துகில்கள் இன்றும் கண்ணிற்குள் உள்ளதாக மருத்துவர்களினால் கூறப்பட்டுள்ளது.

**சேயோன் எப்படி ராணுவத்தின் தாக்குதலுக்கு இலக்கானார்?**

2008ம் ஆண்டு டிசம்பர் மாதம் 20ம் தேதி சேயோன், ராணுவத்தின் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளார்.

தங்களுடன் சண்டைக்கு சென்ற படகொன்று காணாமல் போன நிலையில், அந்த படகை தேடுமாறு தமக்கு கட்டளையொன்று பிறப்பிக்கப்பட்டதாக அவர் குறிப்பிடுகின்றார்.

"தேடுவதற்காக சென்ற போது, 35 மீட்டர் தூரத்தில் இலக்கொன்று தெரிவிக்கின்றது. அது எங்களுடைய படகு போல இருக்கின்றது. பார்ப்போம். சிக்னலை போட்டு பார்த்து விட்டு, அருகில் செல்வோம் என அண்ணன் ஒருவரிடத்தில் சொன்னேன். அதற்கு அவர், இல்லை." அது எங்களுடைய படகு தான். நேரடியாக போவோம் என சொல்லி, அங்கு சென்றார். ஆனால் அது கடற்படையின் படகு. கடற்படை எம்மை நோக்கி சுட ஆரம்பித்தது. ஒவ்வொரு படகிலும் ரேடார் இருக்கும். ஸ்கேனல் இருக்கும். ஸ்கேனலின் பைப்பில் பட்டு வெடித்தது. அது வெடித்த இடத்தில் நான் காயப்பட்டேன். வலது கை இயலாது. இடது கையால் இழுத்து இழுத்து ஊர்ந்து போய், மற்ற கரையில் இருந்து விட்டேன். மற்றவர்கள் கடற்படை படகை மூழ்கடித்து விட்டு, என்னையும் அழைத்து கொண்டு கரைக்கு வந்து விட்டார்கள். அந்த சண்டை வெற்றி என்றவுடனும், மேலதிக படகுகள் வராமையினாலும் கரைக்கு வந்தார்கள். என்னை மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள்."

வலது கண் பார்வையை இழந்த சேயோன், பின்னரான காலத்தில் இடது கண் பார்வையையும் படிப்படியாக இழந்துள்ளார்.

மோதலின் போது இடம்பெற்ற வெடிப்பு சம்பவத்தினால் தனது கண்ணுக்குள் சில துகில்கள் காணப்படுகின்றமையும், ஒரு கண்ணில் ஏற்பட்ட ரத்த அழுத்தமும் பார்வை இழக்கப்படுவதற்கான காரணம் என அவர் குறிப்பிடுகின்றார்.

அதேவேளை, தனது ஒரு கால் சதையில் மாத்திரமே செயற்படுவதாக கூறிய அவர், அதனை எம்மிடம் காண்பித்தார்.

2009ம் ஆண்டு மே மாதம் 18ம் தேதி ராணுவ கட்டுப்பாட்டு பகுதிக்கு வருகைத் தந்து, ராணுவத்திடம் சரணடைந்ததாக கூறுகின்றார் சேயோன்.

அதன்பின்னரான காலத்தில் தனக்கு ராணுவம் புனர்வாழ்வளித்து, தன்னை பெற்றோரிடம் ஒப்படைத்ததாகவும் அவர் குறிப்பிடுகின்றார்.

ராணுவம் தன்னை மிகவும் அரவணைத்து, தனக்கான மருத்துவ உதவிகளை வழங்கி புனர்வாழ்வு அளித்ததாகவும் அவர் கூறுகின்றார்.

"பழைய காலத்து ஆட்கள் கூறுவார்கள் எதிரியையும் அணைக்க வேண்டும் என்று. அவர்கள் என்னை எதிரியாக நினைக்கவில்லை. அரசாங்கம் எதிரியாக நினைக்கவில்லை எங்களை. சகோதரன் மாதிரி நினைத்து, டாக்டர் கிளினிக் போட்டு கொடுத்த நேரத்திற்கு தவறாமல் என்னை மருத்துவமனைக்கு அழைத்து சென்று, கிளினிக்கை முடித்த பின்னர் புனர்வாழ்வில் விட்டார்கள்." என கூறுகின்றார் சேயோன்.

**காதலித்து திருமணம் செய்துக்கொண்ட சேயோன் - காதலை பகிர்ந்த மனைவி கார்த்திகா**

யுத்தம் முடிவடைந்ததன் பின்னரான காலத்தில் புனர்வாழ்வளிக்கப்பட்ட சேயோன், வவுனியாவில் வாழ்ந்து வந்துள்ளார்.

இதன்போது, தனது ஒரு கண் பார்வையை மாத்திரமே இழந்திருந்த சேயோன், வவுனியாவில் பணிப் புரிந்த கார்த்திகாவை சந்தித்துள்ளார்.

சேயோனின் காதலை முதலில் ஏற்க மறுத்த கார்த்திகா, பின்னரான காலத்தில் தனது விருப்பத்தை தெரிவித்து, திருமண பந்தத்தில் இணைந்துள்ளனர்.

"பேக்கரி பொருட்கள் விற்பனை செய்யும் கடையில் வேலை செய்தேன். அப்போது நாளாந்தம் வருவார். இவருடைய நண்பர்களும் வருவார்கள். போன் நம்பரை கேட்பார். நான் கொடுக்க மாட்டேன். சோடா வாங்கி குடித்து விட்டு போவார். எனக்கு கொஞ்சம் காது பிரச்னை. உனக்கு காது பிரச்னை, எனக்கு ஒரு கண் பிரச்னை என்று இவர் சொன்னார். இப்படி நாளாந்தம் சோடா குடிக்க வரும் இவர், ஒரு நாள் சோடாவை குடித்து விட்டு, உனக்கு விருப்பமாக இருந்தால், இந்த சோடா அரைவாசியை குடி என்று சொன்னார். போன் நம்பரை கேட்டார்.

எனக்கு விருப்பம் இருந்தது. திடீரென்று சொல்ல முடியாது தானே. போன் நம்பரை விளையாட்டாக நான் சொன்னேன். இவர் பாடமாக்குவார் என்று நான் எதிர்பார்க்கவில்லை. போயிட்டு, ஐந்து நிமிடங்களில் தொலைபேசியில் அழைத்தார். பிறகு நாளாந்தம் கதைப்பார். நானும் சரி சொல்லிவிட்டேன். எங்களுடைய வீட்டில் விருப்பம் இல்லை. இவருடைய அம்மா, அப்பாவிற்கு விருப்பம். பிறகு இவருடைய வீட்ட நான் போய் விட்டேன்.

"பிறகு மூத்த மகள் பிறக்கவிருந்த போது, எனது குடும்பத்துடன் சேர்ந்துக்கொண்டேன். இவருக்கும் நான்கு, ஐந்து வருடங்கள் பார்வை இல்லாது போய்விட்டது. மூத்த மகளை தெரியும், இரண்டாவது மகளை தெரியும். கடைசி மகளை தெரியாது. கடைசி மகள் வயிற்றில் இருக்கும் போது தான் பார்வை முழுமையாக இல்லாது போனது. போராட்டத்திற்கு மத்தியில் வாழ்ந்து வருகின்றோம்." என தனது காதலை பகிர்ந்துக்கொண்டார் சேயோனின் மனைவி கார்த்திகா.

விவசாயத்தையும், கற்பித்தல் நடவடிக்கைகள் மற்றும் தையல் போன்ற தொழில்களை வாழ்வாதார தொழில்களாக செய்து, தங்களது வாழ்க்கையை முன்னோக்கி கொண்டு செல்கின்றது சேயோன் குடும்பம்.

(பிபிசி)

# தமிழர்களுக்காக வாதிடுவதை கனடா ஒருபோதும் நிறுத்தாது!

## முள்ளிவாய்க்கால் நினைவு செய்தியில் ஜஸ்டின் ரூடோ

மொன்றியல், மே 20

"போரில் பாதிக்கப்பட்ட தமிழர்களது உரிமைகளுக்காகக் குரல் கொடுப்பதைக் கனடா ஒருபோதும் நிறுத்தாது. கனடா தமிழர்கள் நாட்டுக்கு ஆற்றிவருகின்ற பங்களிப்பை அங்கீகரித்து ஏற்குமாறும் இலங்கை ஆயுதப் போரின் தாக்கங்களை மேலும் அறிந்து கொள்ளுமாறும் கனடா அரசு சார்பாகக் கனடிய மக்களுக்கு அழைப்பு விடுக்கிறேன்."

-இவ்வாறு பிரதமர் ஜஸ்டின் ரூடோ முள்ளிவாய்க்கால் நினைவு நாளை முன்னிட்டு விடுத்துள்ள செய்தியில் மேற்கண்டவாறு தெரிவித்திருக்கிறார்.

ஈழத் தமிழர்கள் இன அழிப்புச் செய்யப்பட்டதைக் குறிக்கின்ற மே மாதம் 18 ஆம் திகதியைக் கனடாவில் தமிழர் இன அழிப்பு நினைவு நாளாகக் கடந்த ஆண்டில் அந்நாடு பிரகடனம் செய்தது. அதன் பின்னர் பிரதமர் ரூடோ அந்த நாளை ஒட்டிய தனது முதலாவது செய்தியை நேற்று முன்தினம் வெளியிட்டிருக்கிறார்.



ஈழத் தமிழர்களது இன அழிப்பு நினைவு நாளில் நாட்டின் அரசுத் தலைவர் ஒருவரிடம் இருந்து வெளியாகின்ற முதலாவது உத்தியோகபூர்வ அறிக்கை இதுவே ஆகும்.

அதில் அவர் தெரிவித்திருப்பதாவது :

"இலங்கையில் 14 ஆண்டுகளுக்கு முன்னர் முடிவடைந்த ஆயுதப் போரின் போது ஏற்பட்ட துயரமான உயிர் இழப்புகளைப் பற்றி இன்று நாம் சிந்திக்கிறோம். முள்ளிவாய்க்கால் படுகொலை உட்பட போரில் பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் தங்கள் உயிர்களை இழந்தனர், மேலும் பலர் காணாமல் போயினர், காயமடைந்தனர். அல்லது இடம் பெயர்ந்தனர். பாதிக்கப்பட்ட வர்கள், மற்றும் உயிர் பிழைத்த வர்கள், அவர்களின் அன்புக் குரியவர்கள், இந்த அர்த்தமற்ற வன்முறையால் ஏற்படும் வலியுடன் தொடர்ந்து வாழ்கிறார்கள். அவர்களை இந்த நாளில் எண்ணிப் பார்க்கின்றோம்.

"போரினால் பாதிக்கப்பட்ட தமிழ் - கனடியர்களின் கதைகளை நான் பல ஆண்டுகளாக நாடு முழுவதும் உள்ள சமூகங்களில் சந்தித்த பலர் ஊடாக அறிந்திருக்கிறேன். மனித உரிமைகள், அமைதி மற்றும் ஜனநாயகம் ஆகியவற்றை ஒரு பொருட்டாக எடுத்துக் கொள்ள முடியாது என்பதை அந்தக் கதைகள் நினைவூட்டுகின்றன. அதனால்தான் மே 18 ஐ தமிழ் இனப்படுகொலை நினைவு நாளாக ஆக்குவதற்கான பிரேரணையை பாராளுமன்றம் கடந்த ஆண்டு ஏகமனதாக ஏற்றுக்கொண்டது. இந்த மோதலில் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் உயிர் பிழைத்தவர்களின் உரிமைகளுக்காகவும், அத்துடன் இலங்கையில் தொடர்ந்து கஷ்டங்களை எதிர்நோக்கும் அனைவருக்காகவும் வாதிடுவதைக் கனடா ஒருபோதும் நிறுத்தாது.

"நாட்டில் மனித உரிமைகள், பொருளாதாரம் மற்றும் அரசியல் நெருக்கடிகளுக்குத் தீர்வு காண இலங்கை அரசாங்கத்தை அழைக்கும் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவைத் தீர்மானத்தை ஏற்றுக்கொள்வதில் 2022 ஆம் ஆண்டு ஒக்ரோபரில் நாங்கள் எங்கள் சர்வதேச பங்காளிகளுடன் இணைந்தோம். இலங்கையில் வருங்காலங்களில் சமாதானம் மற்றும் நல்லிணக்கத்தைப் பாதுகாப்பதற்கான பிரதான கூறுகளான மத சுதந்திரம் , நம்பிக்கை பன்மைத்துவ சுதந்திரம் - மற் றும் மனித உரிமைகளைப் பாது காப்பதற்கான சர்வதேச தலை மைப் பாதுகாவலனாகக் கனடா விளங்கி வந்துள்ளது. அந்தப் பணி இனியும். தொடரும். மேலும் இலங்கைத் தீவில் நடந்த மனித உரிமை மீறல்களுக்குப் பதிலளிக்கும் வகையில், கடந்த ஜனவரியில் நான்கு இலங்கை அரசு அதிகாரிகளுக்கு எதிராக எங்கள் அரசாங்கம் தடைகளை விதித்தது.

"தமிழ் - கனடியர்கள் நம் நாட்டிற்கு ஆற்றி வரும் - மற்றும் தொடர்ந்து செய்து வரும் பல பங்களிப்புகளை அங்கீகரிக்குமாறு கனடியர்கள் அனைவரையும் கனடா அரசாங்கத்தின் சார்பாக அழைக்கிறேன். இலங்கையில் ஆயுதப் போரின் தாக்கம் பற்றி மேலும் அறிந்துகொள்ளவும், பாதிக்கப்பட்ட அல்லது இழப்புகளைச் சந்தித்த அன்புக்குரியவர்களுக்கு எங்கள் ஐக்கியத்தை வெளிப்படுத்தவும் அனைவரையும் ஊக்குவிக்கிறேன்."

-இவ்வாறு பிரதமர் ஜஸ்டின் ரூடோ தெரிவித்திருக்கிறார்.

(அ)







# கிழக்கின் முதல் தமிழ் ஆளுநராக நேற்றுக் கடமையேற்றார் செந்தில்





திருமலை, மே 20

**கிழக்கு மாகாணத்தின் முதல் தமிழ் ஆளுநர் செந்தில் தொண்டமான் நேற்று வெள்ளிக்கிழமை காலை திருகோணமலையில் பதவியேற்றார்.**

கிழக்கு மாகாண தலைமைச் செயலாளர் மற்றும் செயலாளர்கள், உயரதிகாரிகள், அரசியல் பிரமுகர்கள் என ஆயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்டனர்.

புதிய ஆளுநருக்கு மகத்தான வரவேற்பு அளிக்கப்பட்டது.

பின்னர் ஆளுநர் பணிமனையில் சிங்களத்தில் தேசிய கீதம் இசைக்கப்பட்டது.

ஆளுநர் பதிவேட்டில் ஒப்பமிட்டதும் பலரும் அவருக்கு பொன்னாடை போர்த்தி கௌரவித்தனர்.

இந்த நிகழ்வில் இராஜாங்க அமைச்சர்களான ஜீவன் தொண்டமான், சதாசிவம் வியாழேந்திரன், பாராளுமன்ற உறுப்பினர் மருதபாண்டி ரமேஸ்வரன் உட்பட பலர் பங்கேற்றனர். (அ)

# தொழிற்சங்கங்களை அரவணைத்து செயல்படுவதற்கு முன்வாருங்கள்

நிந்தவூர், மே 20

"கிழக்கில் தொழிற்சங்கங்களையும் அரவணைத்து, தொழிற்சங்க ஆலோசனைகளையும் கவனத்திற் கொண்டு சிறந்த ஆளுநர் நிருவாகத்தை முன்னெடுக்க முன்வாருங்கள்" -இவ்வாறு, கிழக்கு மாகாண புதிய ஆளுநராகப் பதவியேற்றுள்ள இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமானுக்கு, அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கம் அனுப்பிவைத்துள்ள வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளது.

அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கம் சார்பில் அதன் தலைவரும் தொழிற் சங்கவாதியுமான எஸ்.லோகநாதன் சங்கம் சார்பிலான வாழ்த்துச் செய்தியை அனுப்பியுள்ளார்.

இந்த வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: கடந்த முப்பது வருடங்களுக்குப் பின்னர் தமிழ்ப் பேசும் மகனாகிய நீங்கள் கிழக்கு ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ளமை குறித்து நாம் மகிழ்வடைகிறோம்.

அதிலும் முக்கியமான ஓர் தொழிற் சங்கத் தலைவராகத் தாங்கள் உள்ளமை எமக்கு இரட்டிப்பு மகிழ்வையும், திருப்தியையும் தரும் அதேவேளை இந்த நியமனத்தை வழங்கிய ஜனாதிபதிக்குப் பெரு நன்றியையும் தெரிவிக்கின்றோம்.


கிழக்கில் தொழிலாளர் வர்க்கத்தின் பல பிரச்னைகள் தீர்க்கப்படாது இழுத்தடிக்கப்பட்டே வரும் நிலையில், அண்மையகாலங்களில் ஆளுநரால் தொழிற்சங்கங்கள் புறக்கணிக்கப்பட்டும், தொழிற்சங்க ஆலோசனைகள் புறந்தள்ளப்பட்டும் வந்தன.

இதனால் அத்தகைய ஆளுநரை அகற்ற வேண்டுமென்ற போராட்டத்தில் எமது தொழிற் சங்கம் முன்னின்றது.

மேலும் கிழக்கு மாகாண சபையின் தற்சமயம் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதி நிதிகள் எவருமில்லாததால், தாங்கள் உடனடியாக மாகாண அமைச்சுகளுக்கு ஆலோசனை சபைகளை அமைக்க முன்வருமாறும்,

முக்கியமாக அவ்வாறு அமைக்கும் ஆலோசனை சபைகளில் தொழிற் சங்கங்களுக்கும் இடமளித்து இந்த ஆலோசனை சபைகள் சிறப்புற இயங்க ஆவன செய்யுமாறு கொருகின்றோம்.

தங்களது பதவிக்காலத்தின் சிறந்தொரு ஆளுநர் நிர்வாகத்தை நம்பிக்கையுடன் நாம் எதிர்பார்ப்பதுடன் எமது தொழிற் சங்கம் தங்களுக்குப் பூரண ஒத்துழைப்பை நல்குமென்பதையும் தெரிவிக்கின்றோம்-என்றுள்ளது.(அ-06)



உலகளாவிய இராமகிருஷ்ண, மிஷனின் துணைத் தலைவர் மற்றும் சென்னை சிறி இராமகிருஷ்ணமடத்தின் தலைவருமான சிறீமத் சுவாமி கௌதமானந்தாஜீ மகராஜ் நேற்று முன்தினம் வியாழக்கிழமை மட்டக்களப்புக்கு விஜயம் செய்தார். (அ)

# சம்மாந்துறை அரபுக் கல்லூரி பொன்விழாவும் பட்டமளிப்பும்

நிந்தவூர், மே 20

கிழக்கிலங்கைகின் பிரபல அரபுக் கல்லூரியான சம்மாந்துறை தப்லீகுல் இஸ்லாம் அரபுக் கல்லூரியின் 50 ஆவது ஆண்டு நிறைவு பொன் விழாவும், 18 ஆவது பட்டமளிப்பு நிகழ்வும் இன்று சனிக்கிழமை சிறப்பாக நடைபெறவிருக்கின்றது.

தப்லீகுல் இஸ்லாம் அரபுக் கல்லூரியின் தலைவர் அஷ்ஷெய்க் ஐ.எம். இஸ்மாயில் (தப்லீகி) தலைமையிலும் கல்லூரி அதிபர் அஷ்ஷெய்க் எஸ்.இஸ்மாலெப்பை (தப்லீகி) முன்னிலையிலும் விழா நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

சம்மாந்துறை பெரிய ஜும்ஆ பள்ளிவாசலில் நடைபெறவிருக்கம் இந்த பொன் விழா மற்றும் பட்டமளிப்பு நிகழ்வில் இலங்கைக்கான குவைத்தூதுவர் மேதகு கலப் எம்.எம்.பூதஹீர் பிரதம அதிதியாகக் கலந்து கொள்ளவுள்ளார்.

மேலும், மட்டக்களப்பு மேல் நீதிமன்ற நீதிபதி அல்-ஹாபிழ் என்.எம்.அப்துல்லா மஜ்லீஸ் அஸ்ஸுறாவின் மேனாள் அமீரும், இராஜங்க அமைச்சின் மேனாள் செயலாளருமான அஷ்ஷெய்க் எம்.ஐ.அமீர், ஆகியோர் சிறப்பு அதிதிகளாகவும் கலந்து கொள்வர்.

அத்துடன் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சின் செயலாளர் அஷ்ஷெய்க் எம்.எம்.நயிமுடீன், வெளிவிவகார அமைச்சின் மேலதிக செயலாளர் யூ.எல்.எம். ஜௌஹர், இறப்பர் அபிவிருத்தி திணைக்கள மேலதிக பணிப்பாளர் ஐ.எம்.ஹனிபா, கிழக்கு மாகாண பிரதி பிரதம செயலாளர் ஏ.மன்சூர் கிழக்கு மாகாண பிரதி பிரதம செயலாளர் றிபா உம்மா ஜலீல், கிழக்கு மாகாண பேரவைச் செயலாளர் எம்.எம்.நஸீர் சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.எம்.ஹனிபா, கிழக்கு மாகாண மேனாள் பிரதி பிரதம செயலாளர் ஐ.எம்.ஹுசைன் ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

விழாவில் ஷரீஆ பிரிவைச் சேர்ந்த 35 உலமாக்களும், ஹிப்ழுப் பிரிவைச் சேர்ந்த 10 ஹாபிழ்களும் பட்டம் வழங்கி கௌரவிக்கப்படுவதுடன், கொழும்பு, ஸம்ஸம் பவுன்டேசன் தவிசாளர் அஷ்ஷெய்க். எம்.எச்.முஹம்மத் யூசுப் முப்தி பட்டமளிப்பு உரையும் ஆற்றுவார். (அ-06)

# ஜனாதிபதியுடனான பேச்சுவார்த்தை திருப்திகரமானதாக அமையவில்லை

## கூறுகின்றார் கலையரசன் எம்.பி.





மட்டக்களப்பு, மே 20

ஜனாதிபதியுடனான பேச்சுவார்த்தை என்பது திருப்திகரமானதாக அமையவில்லை என பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் குறிப்பிட்டார்.

மட்டக்களப்பு-அம்பாறை இலங்கை தமிழரசுக்கட்சி கிளை ஏற்பாடு செய்த வலிசுமந்த முள்ளிவாய்க்கால் மே 18 நிகழ்வின் 14 ஆவது நிறைவினை அனுஷ்டிக்கும் முகமாக நாவிதன்வெளி 15 ஆம் கிராமம் முருகன் ஆலயத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரசாங்கம் கையாள்கின்ற ஒவ்வொரு விடயங்களையும் பொதுமக்களாகிய நீங்கள் அவதானிக்கவேண்டும். 1983 ஆண்டு எமது இனம் நாடு பூராகவும் அழிக்கப்பட்ட பின்னர் 2009 ஆண்டு மீண்டும் மிகமோசமாக அழிக்கப்பட்டது.இவ்வாறான விடயங்களை எமது இளைய சந்ததியினர் அறிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகவும் எதிர்காலத்தில் எமது இனம் வாழ வேண்டும் என்பதற்காகவும் இவ்வாறான நிகழ்வுகளை நடத்துகின்றோம்.

இந்த நாட்டின் தலைவர்கள் எந்தவித இதய சுத்தியின்றி எம்மை எவ்வாறு அழிக்கவேண்டும் என்பதை எண்ணிக்கொண்டிருக்கின்றனர்-என்றார்.

இந்த நிகழ்வில் நாவிதன் வெளி 15 ஆம் கிராமம் முருகன் ஆலயத்தில் கூட்டு வழிபாடு இடம்பெற்றது. பின்னர் பூசையை தொடர்ந்து நினைவுச் சுடர் மாவீரர் குடும்பம் சார்பாக இரு தாய்மார் ஏற்றினர்.அத்துடன் 1 நிமிடம் மௌன அஞ்சலியுடன் ஏனையோர் சுடர் ஏற்றினர். (அ)

# டைட்டானிக் கப்பல் தொடர்பான மர்மங்களுக்கு விடை கிடைத்தது!




நியூயோர்க், மே 20

அட்லாண்டிக் கடலில் மூழ்கி விபத்துக்குள்ளான டைட்டானிக் கப்பலின் 3 டி ஸ்கான் புகைப்படம் வெளியாகியுள்ளது.

ஆழ்கடல் ஆராய்ச்சியாளர்கள் டைட்டானிக்கின் முதல் முழு அளவிலான டிஜிற்றல் ஸ்கானை வெளியிட்டுள்ளனர்.

இந்த ஸ்கான் மூலமாக டைட்டானிக் கப்பலின், சிதைவுகளை விரிவாகவும், தெளிவாகவும் பார்க்க முடிகின்றது.

இரண்டு ரிமோட் மூலம் இயக்கப்படும் நீர்மூழ்கிக் கப்பல்களைப் பயன்படுத்தி, ஆராய்ச்சியாளர்கள் குழு கடந்த ஆறு வாரங்களாக வடக்கு அட்லாண்டிக் கடலில் ஆய்வை மேற்கொண்டு இதனை வெளியிட்டுள்ளனர்.

ஏப்ரல் 15 ஆம் திகதி 1912 அன்று, டைட்டானிக் கப்பலானது இங்கிலாந்தின் சவுத்தாம்ப்டனிலிருந்து நியூயோர்க் நகருக்கு தனது முதல் பயணத்தை மேற்கொண்டது.

இதன்போது வடக்கு அட்லாண்டிக் பகுதியில் உள்ள நியூ பவுண்ட்லாந்தில் உள்ள பனிப்பாறையில் மோதி விபத்துக்குள்ளானது.

இந்த சொகுசு கப்பல் சில மணிநேரங்களில் மூழ்கி சுமார் 1,500 பேர் உயிரிழக்கக் காரணமாக அமைந்தது.

டைட்டானிக்கின் முந்தைய படங்கள் பெரும்பாலும் குறைந்த ஒளி அளவுகளால் மட்டுப்படுத்தப்பட்டதாகவும், பார்வையாளர்கள் ஒரு நேரத்தில் சிதைவின் ஒரு பகுதியை மட்டுமே பார்க்க அனுமதித்ததாகவும் காணப்பட்ட நிலையில், தற்போதைய 3 டி ஸ்கானிங் மூலம் தெளிவாகவும், துல்லியமாகவும் பார்க்க முடிகிறது.

(அ)

குர்ஆனை வைத்திருப்பதற்காக

# உய்குர்களை தீவிரவாதிகளாக அடையாளப்படுத்துகிறது சீனா!

நியூயோர்க், மே 20

மனித உரிமைகள் கண்காணிப்பகம் நடத்திய தடயவியல் விசாரணையின்படி, சிறுபான்மை இனமான உய்குர்களின் தொலைபேசிகளை சீன அதிகாரிகள் கண்காணிக்கும் 50,000 அறியப்பட்ட கோப்புகள், உறுதி செய்யப்பட்டுள்ளது.

அத்துடன், பீஜிங் தீவிரவாதம் எனக்கருதும் குர்ஆனைப் பொலிஸார் விசாரணையைத் ஆரம்பிக்கும் அளவுக்கு முக்கியமான பொருளாக காணப்படுவதும் உறுதியாகியுள்ளது.

1989ஆம் ஆண்டு சீனாவில் பெரும் தணிக்கை செய்யப்பட்ட தியனன்மென் சதுக்க படுகொலை பற்றிய தகவல்களும் குறித்த கண்காணிப்புக் கோப்புகளில் உள்ளன.

'சின்ஜியாங்கில் துருக்கிய முஸ்லிம்களுக்கு எதிரான அதன் அருவருப்பான துஷ்பிரயோகங்களை நியாயப்படுத்த சீன அரசாங்கம் மூர்க்கத்தன முறையில் இஸ்லாத்தை வன்முறை தீவிரவாதத்துடன் இணைக்கிறது' என்று மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் சீன இயக்குனர் மாயா வாங் கூறினார்.

'ஐ.நா மனித உரிமைகள் பேரவையானது சின்ஜியாங்கில் சீன அரசாங்கத்தின் துஷ்பிரயோகங்களை விசாரித்து நீண்ட கால நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்றும் அவர் வலியுறுத்தினார்.

மனித உரிமைகள் கண்காணிப்பகத்தால் பகுப்பாய்வு செய்யப்பட்ட முதன்மை பட்டியல் 2019 ஆம் ஆண்டில் அமெரிக்காவை தளமாகக் கொண்ட



ஊடகமான இன்டர்செப்டில் கசிந்த சின்ஜியாங் பொலிஸ் தரவுத்தளத்திலிருந்து 52ஜிபி அளவிலான ஆவணங்களின் ஒரு பகுதியாகும், ஆனால் இது வரை அது பகிரங்கப்படுத்தப்படவில்லை.

2017 மற்றும் 2018 க்கு இடையில் 1 மில்லியனுக்கும் அதிகமான தொலைபேசிகளில் இருந்து 11.2 மில்லியன் கோப்புக்களில் பொலிஸாரால் அடையாளமிடப்பட்ட 1,000 கோப்புகளின் பகுப்பாய்வு, பிரச்சினைக்குரியதாக அடையாளம் காணப்பட்டுள்ளது.

சின்ஜியாங்கில் தொடர்ச்சியான குண்டுவெடிப்புகள் மற்றும் கத்தி தாக்குதல்களுக்குப் பிறகு தொடங்கப்பட்ட 'தொழில் பயிற்சி மையங்கள்' என்று குறிப்பிடப்படும் - மறு கல்வி முகாம்களில் ஒரு மில்லியனுக்கும் அதிகமான மக்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# இத்தாலியில் கனமழை 9 பேர் வரை உயிரிழப்பு




ரோம், மே 20

இத்தாலியின் வடக்குப் பகுதி எமிலியா மாகாணத்தில் பெய்த கனமழையினால் அங்கு வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது.

மேலும், வெள்ளத்தினால் நிலச்சரிவும் ஏற்பட்டுள்ளது. இதுவரை வெள்ளத்தில் சிக்கி 9 பேர் பலியாகினர் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த வெள்ளத்தால் 37 நகரங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. ஏராளமான விவசாய நிலங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன. 100 இற்கும் மேற்பட்ட மக்கள் தங்கள் வீடுகளை இழந்துள்ளனர்.

இத்தாலியின் சில பகுதிகளில் வருடம் முழுவதும் பெய்ய வேண்டிய மழை வெறும் 36 மணி நேரத்தில் பெய்துள்ளதாக அந்நாட்டு வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

(அ)

# ஆப்கானின் பிரதமராக அப்துல் கபீர் நியமனம்!

## தலிபான்கள் கூடி தீர்மானம்

காபூல், மே 20

மௌலவி அப்துல் கபீரை ஆப்கானிஸ்தானின் பிரதமராக தலிபான்கள் நியமித்திருக்கிறார்கள்.

2020 ஆம் ஆண்டு டோஹா ஒப்பந்ததத்தில் அமெரிக்காவுடன் பேச்சுவார்த்தை நடத்திய தலிபான்கள் குழுவில் முக்கியமாக பங்காற்றியவர் அப்துல் கபீர்.



அமெரிக்க தலையீட்டால் ஆப்கானிஸ்தானில் 2001 ஆம் ஆண்டு தலிபான்களின் ஆட்சி நீக்கப்பட்டது. அப்போது, அங்கு அதிகாரமிக்க பதவியில் கபீர் இருந்தார். கபீர் மீது ஐக்கிய நாடுகள் சபை பொருளாதாரத் தடைகள் விதித்தது. இதனால் கபீர் பாகிஸ்தானுக்கு தஞ்சம் புகுந்தார். இதன் தொடர்ச்சியாக, தலிபான்கள் கடந்த 2021 ஒகஸ்ட்டில் ஆட்சியை கைப்பற்றிய பிறகு முல்லா முகமது ஹசன்தான் ஆப்கானிஸ்தானில் ஆட்சி பொறுப்பில் நியமிக்கப்பட்டார். இந்த நிலையில், கபீருக்கு பிரதமர் பதவியை தலிபான்கள் வழங்கி உள்ளனர்.

முல்லா முகமது ஹசன் உடல்நலக் குறைவால் சிகிச்சையில் இருப்பதனால் கபீர் தற்போது பிரதமராக நியமிக்கப்பட்டுள்ளதாக தலிபான்கள் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை- தலிபான்களுக்குள் அதிகாரப் போட்டி நிலவுவதாக செய்திகள் வெளியாகின. ஆனால், இதனை தலிபான்கள் மறுத்துள்ளனர். இது வழக்கமான மாற்றம்தான் என்றும் அவர்கள் விளக்கமளித்துள்ளனர்.

ஆப்கானிஸ்தானில் இருந்து அமெரிக்கா மற்றும் நேட்டோ படைகள் கடந்த 2021 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் வெளியேறின. அதன் பின்னர் தலிபான்கள் ஆட்சியைக் கைப்பற்றினர். இஸ்லாமியர்களின் ஷரியத் சட்டத்தின்படியே ஆட்சி என்று அவர்கள் அறிவித்தனர். எனினும், கடந்த முறையைப் போல் ஆட்சி இருக்காது என்றும், பெண் கல்வி பெண் சுதந்திரம் பேணப்படும் என்றும், உலக நாடுகளுடன் நட்புறவு ஏற்படுத்தப்படும் என்றும் அவர்கள் உறுதியளித்தனர்.

ஆனால், அவர்களின் அறிவிப்புக்கு மாறாக தலிபான் நிர்வாகம், ஆப்கானிஸ்தானில் பெண்கள் பணிக்கு செல்ல அனுமதி மறுத்தனர். சிறுமிகள் உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கு செல்வது தடை விதித்தது. பல்கலைக்கழகங்களிலும் பெண்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# ஜி- 7 உச்சிமாநாட்டில் உக்ரைன் ஜனாதிபதி!



மொஸ்கோ, மே 20

ஜப்பான் ஹிரோசிமா நகரில் நடைபெறும் ஜி-7 உச்சி மாநாட்டில் உக்ரைன் ஜனாதிபதி விளோடிமிர் ஜெலன்ஸ்கி கலந்துகொள்வாரென என இராஜதந்திர வட்டாரங்களில் இருந்து தெரியவருகின்றது.

குறித்த மாநாட்டில் உக்ரைன் ஜனாதிபதி 'காணொளி' ஊடாக உரையாற்றுவார் என ஆரம்பத்தில் அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும், அவர் தற்போது மாநாட்டில் நேரில் பங்கேற்பார் என தெரியவருகின்றது.

இதன்படி ஞாயிறன்று அவர் ஜப்பானில் களமிறங்குவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஜி-7 மாநாட்டில் கலந்துரையாடப்படும் விடயங்களில் உக்ரைன் - ரஷ்யா போரும் நிகழ்ச்சி நிரலில் உள்ளடக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

ஜி-7 அமைப்பில் உக்ரைன் அங்கம் வகிக்காதபோதும் பார்வையாளராக பங்கேற்பதற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. ஆஸ்திரேலிய பிரதமருக்கும் அந்த அடிப்படையிலேயே அழைப்பு விடுக்கப்பட்டது.

(அ)

# கெயிலின் சாதனையை சமன் செய்தார் கோலி!



சென்னை, மே 20

நடப்பு ஐ. பி. எல். தொடரின் 65ஆவது லீக் போட்டியில் சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணிக்கு எதிராக சதம் விளாசி அசத்தி இருந்தார் றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் வீரர் விராட் கோலி.

இது ஐ. பி. எல். அரங்கில் அவர் பதிவு செய்யும் ஆறாவது சதமாகும். இதன் மூலம் ஐ. பி. எல். கிரிக்கெட்டில் அதிக சதம் பதிவு செய்திருந்த கிறிஸ் கெயிலின் சாதனையை அவர் சமன் செய்துள்ளார். கெயிலும் ஐ. பி. எல். கிரிக்கெட்டில் ஆறு சதங்களை பதிவு செய்துள்ளார்.

விராட் கோலி விளையாடினாலே அந்த போட்டியில் அவர் தகர்க்க உள்ள அல்லது சமன் செய்யவுள்ள சாதனைகளை போட்டியை ஒளிபரப்பும் நிறுவனங்கள் பட்டியலிடும். அந்த அளவுக்கு பல சாதனைகளை தன் வசம் வைத்துள்ளார் கோலி. இது சர்வதேச கிரிக்கெட் முதல் ஐ. பி. எல். வரை நீள்கிறது.

கடந்த 2008 முதல் கோலி விளையாடி வருகிறார். மொத்தம் 236 போட்டிகள். அதில் 228 இன்னிங்ஸ்களில் விளையாடி உள்ளார். 7,162 ஓட்டங்கள் பதிவு செய்துள்ளார். இதில் 50 அரைச்சதங்கள் மற்றும் 6 சதங்கள் பதிவு செய்துள்ளார். இதில் கடந்த 2016 தொடரில் மட்டுமே 4 சதங்களை கோலி பதிவு செய்திருந்தார்.

ஐ. பி. எல். கிரிக்கெட்டில் அதிக சதம் அடித்த வீரர்கள் வரிசையில், விராட் கோலி - 6, கிறிஸ் கெயில் - 6, ஜோஸ் பட்லர் - 5, கே.எல்.ராகுல் - 4, டேவிட் வோர்ணர் - 3, ஷேன் வற்சன் - 3 ஆகியோர் உள்ளனர். (ஐ)



# விராட் கோலி அதிரடி சதம் பெங்களூர் அபார வெற்றி!

ஹைதராபாத், மே 19

நடப்பு ஐ. பி. எல். தொடரில் 7ஆவது வெற்றி பெற்ற றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணி இறுதிக்கு முந்தைய சுற்று (பிளே ஓவ்) வாய்ப்பில் இன்னும் நீடிக்கின்றது.

ஐ. பி. எல். கிரிக்கெட் தொடரில் நேற்று முன்தினம் நடந்த சன்ரைசர்ஸ் ஹைதராபாத் மற்றும் றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணிகள் மோதின. ஹைதராபாத்தில் நடைபெற்ற இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற பெங்களூர் அணியின் தலைவர் டு பிளசிஸ் பந்துவீச்சை தெரிவு செய்தார்.

இதன்படி, முதலில் துடுப்பெடுத்ததாடிய ஹைதராபாத் அணி வீரர்களில் ஒருவரை தவிர மற்றவர்கள் மீண்டும் மோசமான நிலையைத் தொடர்ந்தனர்.

தொடக்க ஆட்டக்காரர் அபிஷேக் ஷர்மா 11 ஓட்டங்களிலும், ராகுல் திரிபாதி 15 ஓட்டங்களிலும் ஆட்டமிழக்க, அடுத்து வந்த அணித் தலைவர் மார்க்ரம் 18 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். எனினும், மறுமுனையில் இருந்த கிளாசன் பொறுப்பை உணர்ந்து அதிரடியாக ஆடினார். அவர் ஐ. பி. எல். தொடரில் தனது முதல் சதத்தை பதிவு செய்தார். 104 ஓட்டங்களில் அவர் வெளியேறிய பின் கடைசி கட்டத்தில் ஹாரி புரூக் 27 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தார்.

இறுதியில், ஹைதராபாத் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 5 விக்கெட் இழப்புக்கு 186 ஓட்டங்களை குவித்தது.

187 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்குகிய பெங்களூர் அணிக்கு விராட் கோலி - டு பிளசிஸ் கூட்டணி சிறப்பாக விளையாடியது. ஆரம்பம் முதலே அதிரடியை கையாண்ட இருவரையும் பிரிக்க ஹைதராபாத் பந்துவீச்சாளர்கள் எடுத்த முயற்சி கைகூடவில்லை. இருவரும் அடுத்தடுத்து அரைச் சதம் கடந்தனர்.

அரைச்சதத்துக்கு பின் டு பிளசிஸ் அமைதியாக ஆட, விராட் கோலி அதிரடியாக ஓட்டங்களை குவிக்க ஆரம்பித்தார். விராட் கோலி ஐ. பி. எல். தொடரில் தனது 6ஆவது சதத்தை பதிவு செய்தார். சிக்ஸர் அடித்து இந்தத் தொடரில் முதல் சதம் அடித்த விராட் கோலி, சதம் அடித்த அடுத்த பந்திலேயே ஆட்டமிழந்தார். 18ஆவது ஓவரில் தான் இந்தக் கூட்டணியை பிரிக்க முடித்து.

விராட் கோலி ஆட்டமிழந்த சில நிமிடங்களிலேயே 71 ஓட்டங்கள் எடுத்திருந்த டு பிளசிஸும் தனது விக்கெட்டை பறிகொடுத்தார். இறுதியில் வெற்றிக்கு 10 ஓட்டங்கள் தேவைப்பட மக்ஸ்வெல் ஒரு பௌண்ட்ரி அடிக்க, 19.2 ஓவரில் 187 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது பெங்களூர்.

ஹைதராபாத் தரப்பில் நடராஜன், புவனேஷ்வர் குமார் தலா ஒரு விக்கெட் வீழ்த்தினர்.

நடப்பு தொடரில் பெங்களூர் பெறும் 7ஆவது வெற்றி இதுவாகும். இந்த வெற்றியின் மூலம் இறுதிக்கு முந்தைய சுற்றுக்கான பந்தயத்தில் இன்னும் உயிர்ப்புடன் உள்ளது அந்த அணி. குஜராத் அணியுடன் இன்னும் ஒரு போட்டியில் அந்த அணி விளையாடவுள்ளது குறிப்பிடத்தக்கது. (ஐ)



# இத்தாலியன் ஓப்பன் ரென்னிஸ் மெத்வதேவ் அரையிறுதிக்கு தகுதி!

ரோம், மே 20

ஆண்கள் ஒற்றையர் காலிறுதி போட்டியில் ரஷ்ய வீரர் டனில் மெத்வதேவ் வெற்றி பெற்றார்.

இத்தாலியன் ஓப்பன் சர்வதேச ரென்னிஸ் தொடர் ரோமில் நடக்கிறது. இதில், நேற்று நடந்த ஆண்கள் ஒற்றையர் காலிறுதி போட்டி ஒன்றில் உலக தரவரிசையில் 3ஆவது இடத்தில் இருக்கும் ரஷ்ய வீரர் டேனில் மெத்வதேவ், ஜேர்மனியின் யானிக் ஹான்மானை சந்தித்தார்.

விறுவிறுப்பாக நடைபெற்ற இந்தப் போட்டியில் தொடக்கம் முதலே மெத்வதேவ் ஆதிக்கம் செலுத்தினார். இந்தப் போட்டியில் 6-2, 6-2 என்ற நேர்செற்றில் ஜேர்மனியின் யானிக் ஹான்மானை விரட்டியடித்து அரையிறுதிக்கு மெத்வதேவ் தகுதி பெற்றார்.

# இத்தாலியன் ஓப்பன் ரென்னிஸ் அரையிறுதியில் ரைபகினா!

ரோம், மே 20

காயத்தால் இகா ஸ்வியாரெக் காலிறுதியில் விலகியமையாகல் அவரை எதிர்த்த ரைபகினா அரையிறுதிக்கு முன்னேறினார்.

இத்தாலியன் ஓப்பன் சர்வதேச ரென்னிஸ் போட்டி ரோமில் நடந்து வருகிறது. இதில் நேற்று முன்தினம் நடந்த பெண்கள் ஒற்றையர் பிரிவின் காலிறுதி போட்டியில் நடப்பு சம்பியனான இகா ஸ்வியாரெக் (போலந்து), 6-ம் நிலை வீராங்கனையான எலினா ரைபகினாவை (கஜகஸ்தான்) எதிர்கொண்டார்.

இதில், ஸ்வியாரெக் 6-2, 6-7 (3-7), 2-2 என்ற கணக்கில் இருந்த போது காயம் காரணமாக போட்டியில் இருந்து விலகினார். இதனால் ரைபகினா அரையிறுதிக்கு முன்னேறினார்.

மற்றொரு காலிறுதியில் தரவரிசையில் 8ஆவது இடத்தில் இருக்கும் லாத்வியா வீராங்கனை ஜெலினா ஆஸ்டாபென்கோ 6-2, 4-6, 6-3 என்ற செற் கணக்கில் ஸ்பெயினின் பௌலா படோசாவை வீழ்த்தி அரையிறுதிக்குள் நுழைந்தார். (ஐ)



# ஜனக ரத்நாயக்கவைப் பதவி நீக்க அரசுக்கு பெரும்பான்மை கிட்டுமா?

## 10 அமைச்சர்கள் தற்போது வெளிநாட்டில்

கொழும்பு, மே 20

**இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்கவை பதவி நீக்குவதற்கான பிரேரணைமீதான வாக்கெடுப்பு எதிர்வரும் 24ஆம் திகதி பாராளுமன்றத்தில் நடைபெறவுள்ள நிலையில், அது நிறைவேற்றப்படுமா என்பது தொடர்பில் சர்ச்சை எழுந்துள்ளது.**

ஆளுங்கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் சுமார் 10 அமைச்சர்கள் தற்போது வெளிநாட்டில் இருப்பதே இதற்கு காரணம் என கூறப்படுகின்றது என சிங்கள இணையத்தளமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஆளும் கட்சிக்கு பாராளுமன்றத்தில் 120 எம்.பி.க்கள் குழு உள்ளது. இந்த 10 பேரும் வாக்குப்பதிவின்போது அவையில் இல்லை என்றால் எம்.பிக்களின் எண்ணிக்கை 110 ஆகிவிடும்.

இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டுமானால், அன்றைய தினம் ஆளும் கட்சி 113 உறுப்பினர்களின் பெரும்பான்மையைப் பெறவேண்டும்.

இதற்கு மேலதிகமாக மொட்டு கட்சியில் உள்ள சில பாராளுமன்ற உறுப்பினர்கள் ஏற்கனவே மகிந்த ராஜபக்ஷ மற்றும் நாமல் ராஜபக்ஷ ஆகியோரைச் சந்தித்து, தமது மனச்சாட்சிக்கு இணங்க இந்த பிரேரணைக்கு வாக்களிக்கமுடியாது என தெரிவித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அந்தக் குழுவில் சுமார் 20 எம்.பிக்கள் உள்ளடங்குவதாகத் தெரியவருகிறது.

எனினும், குறித்த பிரேரணை நிச்சயம் நிறைவேறும் என ஆளுங்கட்சி அறிவித்துள்ளது. (அ)

# முள்ளிவாய்க்கால் சின்னப்பர் ஆலயத்தில் போரில் உயிரிழந்த மக்களுக்காக திருப்பலி



முல்லைத்தீவு, மே 20

தமிழ் இனப்படுகொலையின் 14 ஆம் ஆண்டு நினைவேந்தல் நேற்று முன் தினம் தமிழர்கள் வாழும் தேசமெங்கும் உணர்வெழுச்சியுடன் முன்னெடுக்கப்பட்டது.

இதன் ஒரு அங்கமாக முள்ளிவாய்க்கால் பகுதியில் அமைந்துள்ள புனித சின்னப்பர் ஆலயத்தில் போரில் உயிரிழந்த மக்களுக்காக இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு வழிபாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

அருட்தந்தையால் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டதுடன் ஆலய வளாகத்தில் அமைக்கப்பட்ட கல்லறைகளில் சுடர் ஏற்றி வணக்கம் செலுத்தப்பட்டது. (அ)

# வடக்கு ஆளுநர் செயலகம் முன் ஆறு பேர் நேற்றுப் போராட்டம்!

யாழ்ப்பாணம், மே 20

வடக்கு மாகாண ஆளுநராக திருமதி பி.எஸ்.எம். சார்ள்ஸ் நியமிக்கப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்துக்கு முன்னால் நேற்று போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

வடக்கு மாகாண ஆளுநர் செயலக முன்றலில் நேற்று முற்பகல் 10 மணியளவில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்தப் போராட்டத்தில் ஆறு பேர் கலந்து கொண்டனர்.

ஜனாதிபதியினால் வடக்கு ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ள திருமதி சாள்ஸுக்கு எதிரான ஊழல் குற்றச்சாட்டுகள் எனக் குறிபிடப்பட்ட பதாதைகளை தாங்கியவாறு குறித்த ஆறு பேரும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அத்தோடு ஊழல்வாதியை ஜனாதிபதி பதவியை நீக்கம் செய்ய வேண்டும் எனவும், தவறும் பட்சத்தில் வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகம் சுற்றிவளைக்கப்பட்டுப் போராட்டம் நடத்தப்படும் எனவும் அவர்கள் எச்சரிக்கை விடுத்தனர்.



வடக்கு மாகாண ஆளுநர் செயலக முன்றலில் கவனயீர்ப்புப் போராட்டம் இடம்பெறவுள்ளதாக பொலிஸாருக்கு கிடைத்த புலனாய்வுத் தகவலின் அடிப்படையில் நேற்று காலையிலிருந்து நூற்றுக்கும் மேற்பட்ட பொலிஸார் அங்கு களமிறக்கப்பட்டு வடக்கு மாகாண ஆளுநர் செயலக வளாகத்துக்கு பலத்த பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தது. (அ)

# விவசாயிகளுக்கு துப்பாக்கி!

கொழும்பு, மே 20

விவசாயப் பயிர்களை பாதுகாப்பதற்காக துப்பாக்கிகளை பயன்படுத்துவதற்கு அனுமதிப் பத்திரத்தை வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னக்கோன் தெரிவித்தார்.

விவசாயத்துக்கு துப்பாக்கிகளைப் பயன்படுத்துவது தொடர்பில் முன்னர் இருந்த சட்டத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதோடு, அதற்கான அனுமதிப் பத்திரத்தை வழங்குவதற்காக கொண்டிருக்கவேண்டிய பயிர்ச்செய்கை நிலப்பரப்பின் அளவை 5 ஏக்கர் வரை அதிகரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஒரு வருடத்துக்குள் வன விலங்குகளால் பாரியளவில் பயிர்ச் செய்கைகள் பாதிக்கப்பட்டுள்ளன. இதன் காரணமாக காலத்துக்கு ஏற்றதாக இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

நாட்டில் விவசாயத்தை மேம்படுத்துவதற்கும், விவசாயிகளின் பாதுகாப்பை பலப்படுத்துவதற்காகவும், நாட்டின் உணவுப் பாதுகாப்புக்காக எடுக்கப்படும் முற்போக்கான வேலைத்திட்டங்கள் தொடர்பில் அரசாங்கத்தினால் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

பயிர் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு துப்பாக்கிப் பாவனை தொடர்பிலான மேலதிக விபரங்களை அந்தந்த மாவட்ட செயலகங்களில் பெற்றுக்கொள்ள முடியும்-என்றார். (அ)

# டெங்கு ஒழிப்புக்கு முன்னுரிமை அளிக்குமாறு அரசு அறிவுறுத்தல்

கொழும்பு, மே 20

டெங்கு ஒழிப்புக்கு முன்னுரிமை வழங்குமாறு அனைத்து உள்ளூராட்சிமன்ற அதிகாரிகளுக்கும் அறிவித்துள்ளதாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சிமன்ற இராஜாங்க அமைச்சு தெரிவித்துள்ளது.

மாகாண ஆளுநர்கள், உள்ளூராட்சிமன்ற ஆணையாளரகள், பிரதேச சபை செயலாளர்களுக்கு இந்த அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் ஜனக வக்கும்புர கூறினார்.

டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டத்தில் பொதுமக்களும் மும்முரமாக ஈடுபட வேண்டுமெனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

பஸ்தரிப்பிடங்கள் உள்ளிட்ட அனைத்து பொது இடங்களிலும் துப்புரவுப் பணிகளை விரைவுபடுத்துமாறும் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

ஏதேனுமொரு பகுதியில் சுற்றுச்சூழல் துப்புரவு செய்யப்படாதிருப்பின் அந்த பகுதிக்குப் பொறுப்பான உள்ளூராட்சிமன்றங்களின் உயரதிகாரிகளுக்கு அறிவிக்குமாறும் இராஜாங்க அமைச்சர் ஜனக வக்கும்புர தெரிவித்தார்.

இதேவேளை, டெங்குக் காய்ச்சலினால் பாதிக்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்படும் சிறார்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக கொழும்பு லேடி ரிஜ்வே சிறுவர் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் டாக்டர் ஜி. விஜேசூரிய குறிப்பிட்டார்.

டெங்குக் காய்ச்சலால் பீடிக்கப்பட்ட 43 சிறுவர்கள் வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சை பெறுவதாக அவர் கூறியுள்ளார்.

2 நாட்களுக்கு தொடர்ச்சியாக காய்ச்சல், வாந்தி மற்றும் உடல் சோர்வு இருந்தால் உடனடியாக வைத்தியரை நாடி தேவையான மருத்துவ ஆலோசனை மற்றும் சிகிச்சைகளை பெற்றுக்கொள்ள வேண்டும் என டாக்டர் ஜி.விஜேசூரிய அறிவுறுத்தினார்.

6 மாவட்டங்களிலுள்ள 57 சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகள் தொடர்ந்தும் டெங்கு அதி அபாய நிலையில் இருப்பதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

நாட்டில் இதுவரை டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 34 ஆயிரத்து 801 ஆக பதிவாகியுள்ளது.

அவர்களில் அதிகளவானோர் மேல் மாகாணத்தில் பதிவாகியுள்ளனர். (அ)

# கிளிநொச்சியில் இ.போ.ச பஸ்ஸை வழிமறித்துச் சாரதி மீது தாக்குதல்!

கிளிநொச்சி, மே 20

கிளிநொச்சி, முரசுமோட்டைப் பகுதியில் இலங்கை போக்குவரத்துச் சபை பஸ்ஸை வழிமறித்துச் சாரதி மீது கொடூர தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

தாக்குதலில் படுகாயமடைந்த சாரதி, கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் இரவு 7.20 மணியளவில் இந்த சம்பவம் நடந்தது.

புதுக்குடியிருப்பிலிருந்து கொழும்பு பயணிக்கும் கிளிநொச்சி சாலைக்குச் சொந்தமான பஸ், நேற்று முன் தினம் இரவு 7.20 மணியளவில் முரசுமோட்டைக்கு அண்மையாக வந்த சமயத்தில், முல்லைத்தீவிலிருந்து கிளிநொச்சிக்கு வந்த தனியார் பஸ்ஸின் சாரதியும், நடத்துநரும் இந்த தாக்குதலில் ஈடுபட்டுள்ளனர்.

இ.போ.ச சாரதி, நடத்துநர் மீது தனியார்துறையினர் தாக்குதல் நடத்துவது வாடிக்கையான சம்பவமாக மாறி வரும் நிலையில், இதனைத் தடுக்க கடுமையான சட்ட நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (அ)

# தகுதியற்ற செயலர்களுக்கு பதிலாக புதிய அதிகாரிகளை நியமிக்க ஏற்பாடு

கொழும்பு, மே 20

தகுதியற்ற பிரதேச சபை செயலாளர்கள் மற்றும் மாநகர ஆணையாளர்களுக்கு பதிலாக புதிய அதிகாரிகளை நியமிக்கும் நடவடிக்கை ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு தெரிவித்துள்ளது.

தகுதியற்ற சுமார் 70 அதிகாரிகள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் ஜனக வக்கும்புர கூறினார்.

அவர்களுக்கு பதிலாக தகுதியான அரச அதிகாரிகள் நியமிக்கப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

மக்கள் பிரதிநிதிகள் இன்மையால் பொறுப்புக்கூறவேண்டிய தகுதிவாய்ந்த அதிகாரிகள் உள்ளூராட்சிமன்றங்களுக்கு நியமிக்கப்படவேண்டும் எனவும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

தகுதி இருந்தாலும் மக்களுக்கு சேவையாற்றக்கூடிய வினைத்திறன்மிக்கவர்கள் தெரிவு செய்யப்படும் சந்தர்ப்பத்தில் அது குறித்து விசேட கவனம் செலுத்தப்படும் எனவும் இராஜாங்க அமைச்சர் ஜனக வக்கும்புர மேலும் கூறினார். (அ)

## புலிகளை...

அங்கம் வகிக்கின்றோம். கடந்த 11ஆம் திகதி பயங்கரவாத தடுப்பு பிரிவிலிருந்து எனது வீட்டுக்கு வந்து என்னை விசாரித் தார்கள்.

கடந்த 16ஆம் திகதி ரி. ஐ. டியினர் மூவர் எனது வீட்டுக்கு வந்து என்னிடம் நான்கு மணித்தியாலமும் 50 நிமிடங்களும் விசாரணை நடத்தினர். என்னையும் எனது குடும்பத்தையும் மிரட்டும் வகையில் விசாரணை அமைந்திருந்தது. குறிப்பாக, இந்தியாவின் நிலைப்பாடு எவ்வாறு இருக்கிறது என்று அவர்கள் விசாரணைகளை மேற்கொண்டனர்.

இலங்கை அரசாங்கம் இந்தியாவுடன் நல்லுறவு போன்று காட்டிக் கொண்டாலும் இந்தியாவுக்கு எதிரான நிலைப் பாடுகளையும் கொண்டிருக்கின்றது. கடந்த ஒக்ரோபர் 10ஆம் திகதி, டில்லியில் இடம்பெற்ற மாநாடு ஒன்றில் நான் கலந்து கொண்டமை தொடர்பாக விசாரித்தார்கள். அதில், பயங்கரவாத சட்டம் நீக்கப்பட வேண்டும். மாகாணங்களுக் குரிய அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும், 13ஆம் திருத்தம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்ற விடயங்களை நான் இந்தியாவிடம் வலியுறுத்தி இருந்தேன்.

ஜனநாயக போராளிகள் கட்சி, இந்தியா எவ்வாறன ஆலோசனைகளை வழங்குகின்றது. இந்தியா பணம் வழங்குகின்றதா? இந்தியா உங்களுக்கு என்ன செய்யுமாறு கூறி பணித்திருக்கிறது என்றும் என்னிடம் விசாரித்தனர்.

இந்திய அதிகாரிகளை சந்தித்தால் அவர்கள் இலங்கை மக்களின் சுதந்திரமான வாழ்வை விரும்புவதாக என்று கூறுவார்களேயொழிய தமிழ் மக்கள் தொடர்பாக எந்த விதமான கருத்துக்களை அவர்கள் கூறுவதில்லை என்று அதற்கு பதிலளித்தேன்.

இந்தியா பணத்தை தந்து இலங்கை அரசுக்கு எதிராக செயல்பட சொல்கின்றதா என்ற தொனியில் விசாரணைகளை மேற்கொண்டனர். இந்திய அரசாங்கம் இலங்கை பொருளாதார ரீதியாக நெருக்கடிகளை சந்தித்தபோது இலங்கைக்கு முதலாவதாக உதவி செய்து இலங்கையை பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்டிருந்தது. என்பதனையும் நான் சுட்டிக்காட்டி இருந்தேன்.

இவர்களின் இத்தகைய விசாரணைகள் தொடர்பாக இந்திய தூதரகம் மற்றும் ஏனைய தூதரகங்கள் மற்றும் மனித உரிமைகள் செயல்பாட்டாளர்களுக்கு அறிக்கை சமர்ப்பிக்க இருக்கின்றோம்.

சில தமிழ் அரசியல்வாதிகளும் போராளிகளை காட்டிக் கொடுத்து அரசுடன் இணைந்து சதி முயற்சி செய்கின்ற தகவல்களும் எமக்கு கிடைத்திருக்கின்றன. எனவே, தமிழ் அரசியல்வாதிகள் போராளிகள் மீது இவ்வாறு கட்டவிழ்த்து விடப்படும் விசாரணைகள் தொடர்பில் மௌனம் காக்காது அதற்கு குரல் கொடுக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கின்றோம்.

முள்ளிவாய்க்கால் நினைவு தினம், தியாகி திலீபன் நினைவு தினம், மாவீரர் நாள் நினைவு தினங்களை நீங்கள் எவ்வாறு செய்கின்றீர்கள்? பணம் யார் வழங்குகிறார்கள் போன்ற கேள்விகளையும் அவர்கள் எழுப்பியிருந்தார்கள்.

இதற்கு புலம்பெயர் உறவுகளின் பங்களிப்பின் மூலமே நாங்கள் இத்தகைய விடயங்களை செய்கின்றோமேயொழிய எந்த ஒரு நாட்டினுடைய நிதி பங்களிப்பில் இத்தகைய நிகழ்வுகளை செய்வதில்லை என்பது தொடர்பில் அவர்களுக்கு தெளிவுபடுத்தினேன்.

அவர்கள் மீண்டும் கேட்டார்கள் நினைவேந்தல் நிகழ்வுகளுக்கு இந்தியா உங்களுக்கு பணம் வழங்குகின்றதா? என்பது தொடர்பில் அவர்களுடைய கேள்வி அமைந்திருந்தது.

ஜனநாயக போராளிகள் கட்சியினுடைய ஆவணங்களையும் தங்களிடம் சமர்ப்பிக்குமாறு கூறியிருக்கின்றார்கள்.

இதற்கு, எங்களுடைய ஆவணங்கள் தேர்தல் திணைக்களத்துக்கு வழங்கப்பட்டிருக்கின்றது என்று கூறினேன். தினமும் ஆவணங்களை வழங்குமாறு தொலைபேசி அழைப்பு எடுத்த வண்ணம் உள்ளார்கள்.

இந்த நாட்டின் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு ஒரு செய்தியை சொல்ல விரும்புகின்றோம். ஜனநாயக ரீதியாக செயல்படுகின்ற எங்களை நீங்கள் இவ்வாறான அடக்குமுறைகள் மூலம் எம்மை கட்டுப்படுத்த முயற்சித்தால் அது வேறு விளைவை ஏற்படுத்தும் என்பதையும் நாம் கூறிவைக்க விரும்புகின்றோம் - என்றார். (ஐ)

## தமிழரின்...

சமமாகவும் பிரதிநிதித்துவப்படுத் தப்படுவதை சர்வஜன வாக்கெடுப்பை உள்ளடக்கிய வழிமுறைகள் ஊடாக உறுதி செய்வதன் மூலம் சர்வதேச ரீதியாக ஏற்றுக் கொள்ளப்பட்ட ஜனநாயகக் கோட்பாடுகளும் அமைப்புகளும் அங்கு மேம்படுத்தப்படு வதை இந்த முன்மொழிவு ஊக்குவிக்கிறது - என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## 35ஆயிரம்...

டெங்கு நோயாளர் எண்ணிக்கை 17ஆயிரத்து 338 ஆகக் காணப்பட்டது. மாகாண அடிப்படையில் இங்கேயே அதிக நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

மேலும், புத்தளம் மாவட்டமும் 2,483 ஆக கணிசமான எண்ணிக்கையிலான வழக்குகளை பதிவு செய்துள்ளது, இது மாவட்டங்களின் அடிப்படையில் மூன்றாவது இடத்தில் உள்ளது.

மே மாதத்தில், இதுவரை மொத்தம் 5,406 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இதற்கிடையில், அதிகரித்து வரும் டெங்கு நோய் பரவல் இந்த ஆண்டு ஜனவரி முதல் இதுவரை 22 பேரின் மரணத்துக்கு காரணமாக இருந்துள்ளது.

இந்நிலையில், டெங்கு காய்ச்சலை தடுக்கும் வகையில் சுற்றுப்புறத்தை தூய்மையாக வைத்திருக்குமாறு சுகாதாரத் துறை அதிகாரிகள் பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ)

## போரில்...

ஜெனரல் சவேந்திர சில்வா போரில் உயிரிழந்தவர்களின் உறவினர்கள் எனப் பலர் பங்கேற்றனர்.

மரியாதை அணிவகுப்பைத் தொடர்ந்து தேசிய கீதத்துடன் நிகழ்வு ஆரம்பமானது. இதன் பின்னர், சர்வமத வழிபாடுகள் நடைபெற்றன. தொடர்ந்து போர் களத்தில் உயிரிழந்த படையினருக்காக இரண்டு நிமிடங்கள் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

பின்னர், ரனபெர வாத்தியம் இசைக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து நினைவு தூபிக்கு ஜனாதிபதி உள்ளிட்ட முக்கியஸ்தர்களால் மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

## மாணவியை...

அச்சத்தை ஏற் படுத்தியுள்ளது.

மன்னார் - பண்டார வெளி - மணற்குளம் பகுதியை ரிகாஷா (வயது- 15) என்ற மாணவியே நேற்று முன்தினம் காலை முதல் காணாமல் போயுள்ளார் என்று அறிய வருகின்றது.

நேற்று முன்தினம் காலை முதல் மாணவியை காணவில்லை என்றும். அவர் தொடர்பில் எந்தத் தகவலும் தெரியாத நிலையில், சிலாவத்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். மேலும், மாணவி பற்றிய தகவல்கள் ஏதும் தெரிந்தவர்கள் 074-261 4797 என்ற கைபேசி இலக்கத்துக்கு அறிவிக்குமாறும் கேட்கப்பட்டுள்ளது. (ஐ)

## ஜனாதிபதி...

அவர்களை ராகமை மருத்துவமனையில் பார்வையிட்ட பின்னர் செய்தியாளர்களுக்கு கருத்துவெளியிட்டபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

உள்நாட்டுக் கடனை மறுசீரமைப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. மோல்டோவா, ஐவரிக் கோஸ்ட் உள்ளிட்ட 10 நாடுகள் உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்புகள் இன்றி சர்வதேச நாணய நிதியத்துடன் இணக்கப்பாட்டை எட்டியுள்ளன. இந்த அரசாங்கமே இவ்வாறானதொரு தீர்மானத்தை எடுத்துள்ளது.

மக்களிடமிருந்து உண்மையான தகவல்கள் மறைக்கப்பட்டே நாணய நிதியத்துடன் இணக்கப்பாட்டு ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டுள்ளது. இதன் காரணமாக நாட்டில் உள்ள 90 சதவீதமான மக்கள் பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர்.

சேவைகள் வரையறுக்கப்பட்டுள்ளதன் காரணமாகவே வரிசைகள் இல்லாமல் போயுள்ளன. மக்களின் வாழ்க்கையை சீரழிக்கும் அரசாங்கத்துக்கு பதிலாக, மக்களை வாழ வைக்கும் அரசாங்கமே எமக்கு தேவையாகும். தேர்தலையும், தேர்தலுக்கான வரைபடத்தையும் இந்த அரசாங்கம் அழித்துள்ளது. எவ்வாறிருப்பினும், நீண்ட காலத்துக்கு இவ்வாறு பயணிக்க முடியாது.

எமது கோரிக்கைக்கு ஏற்ப தயார்ப்படுத்தல்களை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கொண்டுள்ளாரெனத் தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. எனவே, எந்த சந்தர்ப்பத்தில் தேர்தல் நடத்தப்பட்டாலும், அதனை எதிர்கொள்ள நாம் தயாராகவே உள்ளோம்.

கட்சியிலிருந்து செல்பவர்கள் செல்லலாம், இணைபவர்கள் இணையலாம். ஆனால், எம்முடன் இணைபவர்களை கொள்கை அடிப்படையிலேயே நாம் இணைத்துக்கொள்வோம் - என்றார். (ஐ)

## மலையக...

நுவரெலியாவில் மலையகம் 200 நிகழ்வில் பங்குகொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

அன்று ஆசியா கண்டத்தில் ஐப்பானுக்கு அடுத்தபடியாக அந்நிய நாட்டு வருமானம் இருந்த நாடு இலங்கைதான். இன்று இந்த நாட்டில் டொலர் இல்லை. ஸ்ரேலிங் பவுண்ஸ் இல்லை. இதற்கு யார் காரணம் நமது உழைப்புக்கு அர சாங்கம் உரிய இடம் வழங்கவில்லை.

அன்று இந்த நாட்டில் வெளிநாட்டு வருமானம் அதிகமாக இருந்தபடியால் சிங்கப்பூர், மலேசியா ஸ்தாபகர்கள் எமது நாட்டை பாராட்டினார்கள் அதற்கு காரணம் எமது மக்களின் உழைப்பு.

அவ்வாறு நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்காக உழைத்த எமது மக்களின் குடியுரிமையையும் வாக்குரிமையையும் பறித்து அரசியல் அநாதைகளாக்கப்பட்டார்கள். நாங்கள் குடியுரிமை இழந்து வாக்குரிமை இழந்து அப்போதும் நாங்கள் உழைத்துக் கொண்டிருந்தோம்.

கடந்த 1964 ஆண்டில் சிறிமா சாஸ்திரி ஒப்பந்தத்தை எங்களையும் - எங்கள் மக்களையும் கேட்காமலே செய்துகொண்டார்கள். அந்த ஒப்பந்தத்தின்படி எமது மக்களை ஆடு, மாடுகளை போல இந்தியாவுக்கு அழைத்து சென்றார்கள்.

இந்திய அரசாங்மும் இலங்கை அரசாங்கமும் அன்று எமது மக்களுக்கு செய்த அநியாயத்தை நாங்கள் இன்னும் மறக்கவில்லை. அன்று எமது மக்களை நாடு கடத்தாமல் இருந்திருந்தால் இன்று பாராளுமன்றத்தில் இந்தியவம்சாவளி மக்கள் சார்பில் 25 பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றத்தில் இருந்திருப்பார்கள்.

எங்களின் வளர்ச்சியில் பல முட்டுக்கட்டைகள் போடப்பட்டன. ஆனால், நாங்கள் கூறுவது எங்கள் சமூகத்தை தேசிய இனமாக பிரகடனப்படுத்த வேண்டும்.

இந்த நாட்டில் வாழும் வட, கிழக்கு மக்கள், முஸ்லிம் மக்கள், சிங்கள மக்கள் ஆகிய மக்களுடன் மலையக இந்திய வம்சாவளி மக்களையும் இணைத்துக் கொண்டால்தான் அது இலங்கை நாடு. எங்களை ஒதுக்கி வைத்தால் இலங்கை நாடு என ஏற்றுக்கொள்ள முடியாது. எங்களையும் ஒரு தனி தேசிய இனமாக ஏற்றுக்கொள்ள வேண்டும்.

மலையக மக்கள் குடியேறி 200 வருடங்களாகிவிட்டது. எங்களுக்கு உரிமை இல்லையென்று ஒப்பாரி வைக்கமாட்டோம். எமது மக்களின் உரிமைகளை பெற்றுக்கொள்ளும் வரை நாம் அகிம்சை வழியில் போராடுவோம் - என்றார்.

## சுதந்திரம்...

இராதகிருஷ்ணன் எம். பி.

நுவரெலியா புதிய நகர மண்டபத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்வில் பேசியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், தென்னிந்தியாவிலிருந்து இலங்கைக்கு நாட்கூலிகளாகவும் அடிமைகளாகவும் அழைத்துவரப்பட்ட எமது மூதாதையர்ககள் கடந்த 200 வருடங்களாக அவர்கள் அனுபவித்த துன்ப, துயரங்களின் வரலாற்றின் கண்ணோட்டத்தை தெளிவுபடுத்தும் நிகழ்வை முத்துலிங்கம் ஏற்பாடு செய்துள்ளார்.

எமது சமூகத்துக்கு இந்த நாட்டில் என்ன நடந்தது என்று கடந்த 60, 70 வருடங்கள்தான் எங்களுக்கு தெரியும். அந்த வகையில் கடந்த 1948 ஆண்டு இந்த நாட்டுக்கு சுதந்திரம் கிடைத்தாலும் இந்த சுதந்திரத்தை மலையக மக்கள் ஏற்றுக்கொள்ள முடியாத சுதந்திரமாக இருக்கின்றது.

ஏன்னென்றால், 1947 ஆம் ஆண்டு இந்தியாவிற்கும் 1948 ஆம் ஆண்டு இலங்கைக்கும் சுதந்திரம் கிடைத்தது. சுதந்திரத்துக்கு முன்பும் சுதந்திரத்துக்கு பின்பும் எமது சமூதாயம் அடிமைகளாக தான் இருக்கின்றோம். என்றுதான் கூறவேண்டும்.

1948ஆம் ஆண்டிற்கு பின் இந்த நாட்டில்வாழும் ஏனையோருக்கு குடியுரிமை வாக்குரிமை உரிமை, சுய மரியாதை இருந்தது. ஆனால், மலையக மக்களுக்கு குடியுரிமையும் வாக்குரிமையும் பறிக்கப்பட்டது.

நாடற்றவர்களாக நாங்களும் வாழ்ந்திருகின்றோம். அதற்கு பின் ஏற்பட்ட அரசியல் மாற்றங்களால் படிப்படியாக மாற்றமடைந்து எமது மக்களுக்கு குடியுரிமையும் வாக்குரிமையும் வழங்கப்பட்டது.

நேரு - கொத்தலாவ ஒரு ஒப்பந்தம் சிறீமா சாஸ்திரி ஒப்பந்தங்கள் செய்யப்பட்டன. அதில் சிறீமா - சாஸ்திரி ஒப்பந்தம் மிகவும் மோசமான ஒப்பந்தம் 6 பேர் இந்தியா சென்றால் 4பேர் இங்கு இருக்கலாம். இதனால், 10 இலட்சம் மக்ககளில் 6 இலட்சம் மக்கள் இந்தியாவுக்கு சென்று விட்டார்கள்.

மிகுதியாக இருந்த 4 இலட்சம் மக்களுக்கு அரசாங்கத்தின் தேவைக்காக படிப்படியாக குடியுரிமையும் வாக்குரிமையும் வழங்கப்பட்டது. சான்றிதழ்கள் மூலமும் சான்றிதழ்கள் இல்லாமல் சத்தியக்கடதாசி மூலமும் வாக்களிக்க தகுதி பெற்றார்கள். இவர்களின் வாக்குகள் மூலமே பல கட்சிகள் ஆட்சி அமைத்து வந்துள்ளன. ஆனாலும் ஒரு சில தனி வீடுகள் கட்டடப்பட்ட போதிலும் இன்னும் தொழிலாளர்கள் லயன் அறைகளிலேயே அதிமானவர்கள் வாழ்ந்து வருகின்றார்கள்.

எதிர் காலத்திலும் இந்த மக்களின் அபிவிருத்திக்காக பல வேலைத்திட்டங்களை முன்னெடுக்கவேண்டியிருப்பதால் அனைத்து மக்களும் ஒன்றிணைந்து செயல்பட முன்வர வேண்டும் - என்றார். (ஐ)

ஈழநாடு
Eelanadu

# இறக்குமதிக்கான தடைகளை தளர்த்தும் திட்டம் ஜூனுக்குள்!

## ஐரோப்பிய ஒன்றியத்துக்கு இலங்கை உறுதி

கொழும்பு, மே 20

**இறக்குமதித் தடைகளை தளர்த்துவதற்கான திட்டத்தை ஜூன் மாதத்திற்குள் முன்வைக்க, நாட்டின் இரண்டாவது பெரிய வர்த்தக பங்காளியான ஐரோப்பிய ஒன்றியத்திடம் இலங்கை உறுதியளித்துள்ளது.**

2020 இல் நடைமுறைக்கு வந்த கட்டுப்பாடுகள், வேகமாக குறைந்து வந்த அந்நியச் செலாவணி கையிருப்பைத் தக்கவைக்கும் நடவடிக்கையாக இலங்கை, இறக்குமதிகளைக் கட்டுப்படுத்தியது.

இந்தநிலையில், அண்மையில் நடைபெற்ற இலங்கை - ஐரோப்பிய ஒன்றியக் கூட்டு ஆணைக் குழுவின் 25ஆவது அமர்வின் போது, தற்போதைய பொருளாதார நிலைமைகளை காரணியாகக் கொண்டு, இறக்குமதிக் கட்டுப்பாடுகளில் இருந்து படிப்படியாக வெளியேறுவதற்கான தமது விருப்பத்தை இலங்கை வெளிப்படுத்தியது.

முன்னதாக இறக்குமதிக் கட்டுப்பாடுகள் நடைமுறைக்கு வந்ததில் இருந்து, குறித்த வர்த்தக கொள்கைகளில் இருந்து விலகு மாறு இலங்கையை ஐரோப்பிய ஒன்றியம் தொடர்ந்து வலியுறுத்தி வந்தமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

## வெப்பம் அதிகரிக்கலாம்

கொழும்பு, மே 20

வடக்கு, கிழக்கு, வடமத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும், மொனராகலை மாவட்டத்திலும் அதிகரித்த வெப்பம் நிலவக்கூடும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

வளிமண்டலவியல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் கூறப்பட்டுள்ளது.

அதேநேரம், மேல், சப்ரகமுவ, மத்திய, வடமேல் மாகாணங்களிலும், காலி, மாத்தறை, மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களுக்குட்பட்ட சில இடங்களில் பிற்பகல் அல்லது இரவு வேளையில், இடியுடன் கூடிய மழை பெய்வதற்கான சாத்தியம் நிலவுவதாக திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (அ)



## வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பதில் பணிப்பாளராக சத்தியமூர்த்தி

யாழ்ப்பாணம், மே 20

வடக்கு மாகாணத்தின் வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பதில் பணிப்பாளராக வைத்திய கலாநிதி த. சத்தியமூர்த்தி நேற்று நண்பகல் பதவியை பொறுப்பேற்றுக் கொண்டார்.

வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஒருவர் நியமிக்கப்படும் வரை, மருத்துவர் சத்தியமூர்த்தி யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் பதவிக்கு மேலதிகமாக இக்கடமையை ஆற்றுவார் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. (அ)



## ஜவஹர்லால் நேரு பல்கலையில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்

புதுடில்லி, மே 20

புதுடில்லியில் அமைந்துள்ள ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது.

மே 18 தமிழர் இனப்படுகொலை நினைவு நாளை முற்போக்கு மாணவர் அமைப்பும் ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழக தமிழ் மாணவர் அமைப்பும் இணைந்து ஏற்பாடு செய்திருந்தன.

இலங்கையில் நினைவேந்தலை மேற்கொள்ளும் மக்களுக்கான தோழமைக்காக தீபமேற்றியும் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கியும் மாணவர்கள் நினைவு கூர்ந்தனர். (அ)

## மாகாண சபையின் அதிகாரத்தை மத்திக்கு தாரை வார்க்கமுடியாது!

### சீ.வீ.கே.சிவஞானம் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், மே 20



மாகாண சபை அதிகாரத்தினை மத்திக்கு தாரை வார்க்கும் செயல்பாட்டை நாங்கள் ஒருபோதும் ஏற்க மாட்டோம் என்ன வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சீ.வீ.கே சிவஞானம் தெரிவித்தார்.

வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளராக மருத்துவர் த.சத்தியமூர்த்தி நியமிக்கப்பட்டமை தொடர்பில் கருத்துரைக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மருத்துவர் சத்தியமூர்த்திக்கு எந்தப் பதவியை கொடுப்பதற்கும் நாங்கள் எதிரானவர்கள் அல்லர். எங்களுக்கு அவர் மீது தனிப்பட்ட ரீதியில் எந்த குரோதமும் கிடையாது.

ஆனால் மாகாண சபைக்குள்ள அதிகாரங்களுக்குட்பட்ட நிறுவனங்கள் அல்லது திணைக்களங்கள் ஆகியவற்றுக்கான நியமனங்கள் மாகாண நிர்வாகத் திற்குட்பட்டவை. அப்படி இருக்கும்போது மத்திய அரசாங்கத்தின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கின்ற யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளராக செயல்படும் ஒருவரை மாகாண சுகாதாரப் பணிப்பாளராக நியமிப்பது என்பது ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல. ஏற்கனவே இதற்கு முன்னரும் ஒருமுறை நியமனம் வழங்கப்பட்டபோது மாகாண சபை பதவியில் இருந்த காலம் என்பதால் அதனை நாங்கள் ஆட்சேபித்திருந் தோம்.

தற்பொழுது மாகாண சபை இல்லாத நிலையிலும் மாகாண சபை அதிகாரத்தை மத்திக்கு தாரை வார்க்கும் செயற்பாட்டை நாங்கள் ஒருபோதும் ஏற்கமாட்டோம்.

அத்துடன் இரண்டு பதவிகளையும் இவர் வகிப்பதனால் இரண்டு பதவிகளுக்குமே பாதிப்பு ஏற்படும். செயற்திறன் குறையும். ஆனபடியினால் ஏதாவது ஒரு பதவிக்கு மாத்திரம் அவரை நியமிப்பது என்பது சாலச்சிறந்தது

எனவே இந்த விடயத்தில் புதிதாக நியமிக்கப்பட்ட ஆளுநர் பொருத்தமான நடவடிக்கை எடுக்கவேண்டும் என கேட்டுக் கொள்கின்றேன்-என்றார். (அ)

## கனடா-இலங்கை இடையே இராஜதந்திர மோதல்நிலை

கொழும்பு, மே 20

தமிழர் இனப்படுகொலை நினைவேந்தல் தினத்தை அங்கீகரிக்கும் விதத்தில் கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தெரிவித்துள்ள கருத்துக்களைத் தொடர்ந்து இலங்கைக்கும் கனடாவுக்கும் இடையில் இராஜதந்திர மோதல் ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் கனடா பிரதமர் விடுத்துள்ள அறிக்கையை இலங்கை வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி கண்டித்துள்ளார்.

“நாங்கள் 14 வருடங்களுக்கு முன்னர் துன்பகரமான விதத்தில் ஏற்பட்ட உயிரிழப்புகளை நினைவு கூறுகின்றோம். முள்ளிவாய்க்காலில் இடம்பெற்ற இனப்படு கொலையில் ஆயிரக்கணக்கான தமிழர்களின் உயிர்கள் இழக்கப்பட்டன. பலர் காணாமல்போனார்கள்-காயமடைந்தார்கள்-இடம்பெயர்ந்தார்கள்.

கொல்லப்பட்டவர்கள், உயிர்பிழைத்தவர்கள் மற்றும் அர்த்தமற்ற வன்முறையால் ஏற்பட்ட துயரத்துடன் தொடர்ந்தும் வாழும் அவர்களின் குடும்பத்தவர்கள் குறித்து எங்கள் சிந்தனைகள் உள்ளன” என முள்ளிவாய்க்கால் நினைவையொட்டி கனடா பிரதமர் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த அறிக்கையை கண்டித்துள்ள இலங்கை வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, இது இலங்கையில் முன்னெடுக்கப்படும் நல்லிணக்க முயற்சிகளுக்கு உதவியாக அமையாது எனவும் சுட்டிக்காட்டியுள்ளார். (அ)

## ஜப்பான் செல்கிறார் ரணில்

கொழும்பு, மே 20

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அடுத்த வாரம் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு ஜப்பான் செல்லவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அவர் எதிர்வரும் 22ஆம் திகதி ஜப்பான் பயணமாவார்.

ஜனாதிபதி கடந்த செப்ரெம்பர் மாதம் ஜப்பானுக்கான உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டிருந்தார்.

ஜப்பானின் முன்னாள் பிரதமர் ஷின்ஷோ அபேயின் இறுதிச் சடங்கில் கலந்துகொள்வதற்காகவே அவர் அங்கு சென்றிருந்தார். (அ)

# வடக்கு ஆளுநரின் வாசஸ்தலத்தில் மந்திரிக்கப்பட்ட பொருட்கள் மீட்பு!

யாழ்ப்பாணம், மே 20

யாழ்ப்பாணத்தில் உள்ள வடக்கு மாகாண ஆளுநரின் உத்தியோக பூர்வ வாசஸ்தலத்தில் இருந்து மந்திரிக்கப்பட்ட பொருட்கள் சில மீட்கப்பட்டு உரிய முறையில் அழிக்கப்பட்டதாக ஆளுநர் செயலகத் தகவல்கள் தெரிவித்தன.

வடக்கு மாகாண ஆளுநராக புதிதாக நியமிக்கப்பட்டுள்ள திருமதி பி.எஸ்.எம். சாள்ஸ் எதிர்வரும் வாரம் பதவியேற்க உள்ள நிலையில் வாசஸ்தலத்தை தூய்மையாக்கும் பணி செயலக ஊழியர்களால் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது ஆளுநரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் உள்ள அறைகளில் போத்தல்களில் அடைக்கப்பட்ட நிலையில் பொருட்கள் காணப்பட்டதை அவதானித்த ஊழியர்கள், குறித்த விடயம் தொடர்பில் உயர் அதிகாரிகளுக்கு தகவல் வழங்கினர்.

உயர் அதிகாரிகள் அது குறித்து வடக்கு மாகாண முன்னாள் ஆளுநரான ஜீவன் தியாகராஜாவுடன் தொடர்பு கொண்டு வினவினர். அவை மந்திரிக்கப்பட்ட பொருட்கள் எனவும், அவற்றினை நிலத்தில் கிடங்கு வெட்டி புதைக்குமாறும் முன்னாள் ஆளுநர் அதிகாரிகளுக்குக் கூறியுள்ளார்.

இதனையடுத்து ஆளுநரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்துக்கு இந்து மதகுரு ஒருவர் வரவழைக்கப்பட்டு மந்திரிக்கப்பட்ட பொருட்கள் அனைத்தும் உரிய முறையில் அகற்றப்பட்டு நிலத்தில் கிடங்கு வெட்டி புதைக்கப்பட்ட சம்பவம் ஒன்று நேற்றுக் காலை இடம்பெற்றதாக ஆளுநர் செயலகத் தகவல்கள் குறிப்பிட்டன. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 20.05.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.